# விவேகபோதினி

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி XI} காளயுக்திஞ் புரட்டாசிமீ :: 1918-ஞ அக்டோபர்மீ { பகுதி 4


## கார்காலம்

### THE WINTER

பய்யணைப் பஃறப் பாந்த ளேந்திய
மொய்நிலத் தகளியின் முழங்கு நீர்நெயின்
வெய்யவன் விளக்கமா மேருப் பொன்றிரி
மய்யெடுத் தொத்தது மழைத்த வானமே.

கண்ணுத லருக்கட னஞ்ச துங்கிய
கண்ணுதல் கண்டத்தின் காட்சி காணலாய்
விண்ணக மிருண்டது வெயிமுன் வெங்கதிர்
தண்ணிய மெலிந்தென தழைத்த மேகமே.

கஞ்சினி னளிர்நெங் கடலி னெங்கையர்
அஞ்சன நயனத்தி னவிழ்ந்த கூந்தலின்
வஞ்சனை யரக்கர்தம் வடிவிற் செல்கையின்
செஞ்சினி னிருண்டது நீல வானமே.

நீனிறப் பெருங்கரி நிறைத்த நீர்த்தெனச்
சூனிற முகிர்குலந் துவன்றிச் சூழ்திரை
மானிற நெடுங்கடல் வாரி மூரிவான்
மேனிரைத் துளதென முழக்க மிக்கதே.

அரிப்பெரும் பெயரவன் முதலி னோரணி
விரிப்பவு மொத்தன வெற்பு மீதுதி
எரிப்பவு மொத்தன வேசி லாசைகள்
சிரிப்பவு மொத்தன தெரிந்த மின்னெலாம்.

மாதிரக் கருமகன் மாரிக் கார்மழை
யாதினு மிருண்டவின் னிருந்தைக் குப்பையின்
கூதிர்வெங் காலெடுந் துருத்திக் கோளமைத்
தூதுவெங் கனலுமி ழுலையு மொத்ததே.

பிரிந்துறை மகளிரும் பிலத்த டாந்தலும்
எரிந்துயிர் நடுங்கிட விரவி யின்கதிர்
அரிந்தன வாமென வசனி காலெவ
விரிந்தன திசைதொறு மிசையின் மின்னெலாம்.

ஆர்த்தெழு துகள்விசும் படைத்த லானுமின்
கூர்த்தெழு வாளெனப் பிறழுங் கோட்பினும்
தார்ப்பெரும் பணையின்வின் டழங்கு தாலினும்
போர்ப்பெருங் களமெனப் பொலிந்த தம்பரே.

கல்லிடைப் படுந்துளித் துவலை காரிடு
வில்லிடைச் சரமென விசையின் வீழ்ந்தன
செல்லிடைப் பிறந்தசெங் கனலிற் சிந்தின
எல்லிடை மணிசிதர்ந் தழலியற் றல்மேல்.

மன்ளர்கண் மறுபடை மான யானைமேல்
வெள்ளிவே லெறிவன போன்ற மேகங்கள்
தள்ளருந் துளிபடத் தகர்ந்து சாய்கிரி
புள்ளிவெங் கடகரி புரள்வ போன்றவே.

பொருடரப் போயினர்ப் பிரிந்த பொய்யுடற்
குருடரு தேர்மிசை யுயிர்கொண் டேய்த்தலான்
மருடரு பிரிவினோய் மாசு ணங்கெடக்
கருடனைப் பொருவின கால மாரியே.

முழங்கின முறை முறை மூரி மேகநீர்
வழங்கின மிடைவன மான யானைகள்
தழங்கின பொழிமதத் திவலை தாழ்தரப்
புழுங்கின வெதிரெதிர் பொருவ போன்றவே.

விசைகொடு மாருத மதித்து வீசலா
அசைவுறு சிறுதுளி யப்பு மாரியின்
இசைவுற வெய்வன வியைவ வயிருந்
திசையொடு திசைசெருச் செய்த செய்தவே.

நானிறச் சுரும்புழ் வண்டு நன்மணி யணியுஞ்சாரற்
றேனுகமலர்ந்து சாய்ந்த செயிதழ்க் காந்தட் செம்பூ
வேனிலை வென்ற தம்மா காரென வியந்து நோக்கி
மானிலத்திழுத் திகைகண் மதித்தன போன்ற மன்னோ

ஆயிரம் நட்சத்திரம் கூடினாலும் ஒரு சந்திரன் ஆகாது.

# விவேக போதினி

தொ.11] காளயுக்திஸு புரட்டாசிமீ [ப.4


## பால லீலை

### PRANKS OF CHILDHOOD

பெருமா உரலில் பிணிப்புண் டிருந்து, அங்
கிருமா மருதம் இருத்த இப்பிள்ளை
குருமா மணிப்பூண் குலாவித் திகழும்
திருமார் பிருந்தவா காணீரே!

சேயிழையீர் வந் ...

பகலில் எழும் சூரியன், இப்பூவலயத்தையும் வானுலகத்தையும் ஒருங்கே சேர்த்து மயங்கச் செய் ...வண்ணம் நாம் காணும்போதெல்லாம் தெய்வ ம...னுஷ ஸம்பந்தம் தாமாகவே மனத்திலுதிக்கலாம். அப்போது ஜடமாகிய இவ்வுலகில் அப்பெருஞ்சுடர் எவ்வாறு உதித்ததென நாம் சிந்திக்கவும் கூடும். உலகில் அது உண்மையில் உதிப்பதில்லை என்பது அறிந்தவர்க்கே தெரியும். ஆனால் அப்பெருஞ்சுடர் இவ்வுலகிற்குக் கேளாமலே செய்யும் உதவி சொல்லுந் திறத்ததன்று. அதுபோலவே காலங்கடந்த ...ருள், லோக ரக்ஷணார்த்தமாகச் சிறு குழ...தை யுருக்கொண்டு தன்னிடம் கொஞ்சுவதை ...ியாத யசோதை, அதைத் தன் வயிற்றுப் பிற...ந்த இளங்குழந்தை என எண்ணி, அதன் அ...வற்ற விளையாடல்களில் ஈடுபட்டு விளங்கின...ள். ஆனால் மாயையால் மூடப்பட்ட ஆத்மா தன் ...யற்கையை யுணரமாட்டாது. அக்குழந்தையி... உண்மைப் பிரபாவத்தை அறியமாட்டாது அவ...ள் அன்பென்னுந் திரையில் ஆழ்ந்துகிடந்தாள். ...னினும் அக்குழந்தையின் பொருட்டு அவள் கொண்... அன்பு, கடவுளிடத்துப் பரமபக்தன் கொள்...ளும் அன்பே என்ப திழுக்காகாது. அக்குழந்தை எவ்விதக் குறும்பு செய்யினும் வெறுப்புக் கொள்ளாது, மலர்ந்த முகத்துடன் அதனிடம் அவள் விளங்கியது, தம்மைப் பரீட்சிக்கும் கடவுளிடம் திடச் சித்தத்துடன் பக்தி செலுத்தும் பக்தரது நிலைமையையே விளக்கும். அவ்வானந்தத் தாயின் வைபவத்திலீடுபடும் பெண்கள், மருந்துக்கும் இக்காலத்துக் கிடைப்பது அரிது என்பது பொய்யாமை யல்லவென மறுக்க எவரும் முன்வரத் தயங்குவர். தாயன்பிற்கு யசோதை லக்ஷணமாகி விளங்குபவள். அவளது லக்ஷணத்தைக் கைக்கொண்ட இந்தியப் பெண்மணிகளே ஆரியரது பெரும் புகழ்க்கெல்லாம் ஆதாரமாகி இருப்பவர். தன் மறுப்பு, கஷ்டத்தைக் கவனியாது கடமையைச் செய்தல், சீலங்கெடாது ஸமயோசிதமாக நடத்தல், வீண் டம்பங்களில் பாய்ந்து சிக்கன மழிந்து, பெற்ற குழந்தைகளைச் சதா வைதும் திட்டியும் வெருட்டியும், அவரது சொல்லமுடியா எண்ணங்களை அறியாது, தம ...டல் நோவல் ... முழுதுங் கவனியாது புடைத்துத் துயருறுத்தும் இக்காலத்து மாதரது நாகரீகத்தைப்பற்றி விரிக்க இது இடம் அன்று. எனினும் யசோதையைத் தெய்வமாகக் கொண்டாடுபவர் எண்ணத்திற்கும் செயலிற்கு முள்ள பேதத்தை ஒருவாறு இங்கு குறித்தது தவறாகாது.

நிற்க. மனிதராசப் பிறந்தவர், தெய்வத்தின் நிலைமையை உணரத்தக்க காலங்கள் நேர்ந்தாலும் அவற்றைக் கவனியாது விளங்குவது உலகப் பிரஸித்தம். இவ்விஷயங்களிலெல்லாம் மதப்பற்று அஸ்திவாரமாக இருந்தாலன்றி மேற்கட்டும் பாரமார்த்திக மண்டபம் அழகற்று விளங்கும். அதிசயச் சம்பவங்கள் முற்காலத்தில் நடந்தன, இக்காலத்தில் நடக்கக் கண்டவரில்லை என்பது தற்காலத்துப் பொது அபிப்பிராயமெனினும், காலதேச வர்த்தமானங்களுக்கேற்ப, மதஸ்தாபனாசாரியர்கள் தமது மதங்களை ஸ்தாபித்த காலங்களிலெல்லாம் விசேஷமான ஸம்பவங்களை நடக்கும்படி செய்துள்ளனர் என்பதை எம்மதத்தினரும் மறுக்கார். சரித்திரமே இதற்குச் சான்றாக இருத்தல் கவனிக்கத் தக்கது. அத்தகைய ஸம்பவங்கள் நடந்தனவென்பதை நாம் ஏன் நம்பவேண்டும்? இக்கேள்விக்கு ஏட்டுச் சுரைக்காய் சிறிதும் உதவாது. அனுபவ

ஆயிரம் வித்தைகள் கற்றாலும் உலகத்தில் ஆடம்பரங்கள் வேண்டும்.

ஞானமே அதற்கிசைய பதிலளிக்கும். அவர்களது ஆணைக்கிணங்க அவற்றில் நம்பிக்கை அத்யாவச்யகம். இல்லாவிடில், மோக்ஷ மார்க்கத்தில் தடையேற்பட்டுத் தத்தளிக்கவரும்.

எனவே, குழந்தையாக வளர்ந்த கண்ணன் தனது தெய்வீகத்தைப் பன்முறை விளக்கிக் காட்டினும், மானுஷாவஸ்தையில் கிடந்த யசோதை, அதை யுணரமுடியாது விளங்கியது அதிசயமாகாது. ஆயினும், இடையிடையே அவள் தன் குழந்தையின் அதிசய வைபவத்தையும் அற்புதச் செயலையும் கண்டு சிற்சில ஸமயங்களில் பிரமித்தனளாயினும், எம்பெருமான் தமது லீலையை வெளியிடவென்றே, அவளது அன்பின் பெருக்கை முழக்கவென அவளைத் தன் ஆடல்களில் மயக்கித் தன்வயப் படுத்திவந்தனர்.

ஒரு நாள் யசோதை தன் குழந்தையின் திருவிளையாடல்களைச் சேர்த்துப் பாடலாகப் பாடிக்கொண்டு உடம்பு முழுதும் முத்துமுத்தாக வியர்வை சொரிய, குழந்தைபிடத்து அன்பாற் பால் பெருக, அணிந்திருந்த அணிஆடை எல்லாம் நெகிழத் தயிர்கடைந்துகொண் டிருந்தாள். பாலருந்தவெனக் கண்ணன் அவளருகு வெகு ஆவலுடன் வர, அவள் தன் சிரமத்தையெல்லாம் மறந்து, குழந்தையை வாரியணைத்து முத்த மிட்டுப் பாலூட்டினாள். ஆனால் எதிரில் அடுப்பின்மீது இருந்த பால் பொங்கவே, வயிறு நிறம்பாததனால் திருப்தியடையாத குழந்தையைச் சற்றே கீழ்விட்டுவிட்டு அவள் பாலைக் கவனிக்கச் சென்றாள். வெறிகொண்ட குழந்தை சீறி, உதட்டைக் கடித்துக்கொண்டு பக்கத்திலிருந்த கல்லொன்றை வீசி எறிய, அது மேல்பட தயிர்ப்பானை உடைந்தது. அதிலிருந்து வெளிவந்த வெண்ணையை எடுத்துக்கொண்டு, ஓடிப்போய் ஒரு மூலையில் உட்கார்ந்து, தனது இருகண்களையும் கெட்டியாக மூடிக்கொண்டு தலையை யசைத்து யசைத்து அவ்வெண்ணையை வாயிவிட்டு அக்குழந்தை தன் சிறு விரல்களையுந் திணித்து சுவைத்துக்கொண் டிருந்தது. யசோதை வந்ததும் தயிர்ப்பானை யுடைந்திருக்கக் கண்டாளேனும், குழந்தையை யங்கு காணவில்லை.

யசோதைக்குக் கோபமூண்டது. குழந்தையைக் கண்டு பிடித்தாள்; மர உரலின்மேல் அது உட்கார்ந்துகொண்டு வெண்ணெயுண்பதைப் பார்த்தாள்; சிறு கழியொன்றை எடுத்துக்கொண்டு அதை வெருட்டவென வந்தனள். யோகியர்களாலும் காணமுடியா அக்குழந்தை நடுநடுங்கியதுபோல அபிநயித்து அவ்விடத்தைவிட் டோடத் தலைப்பட்டது. யசோதையும் அதைத் துறத்திக்கொண்டு சென்றாள். கன்னக் குறவன்போல மிரள மிரள விழிக்கும் அக்குழந்தையை அவள் வெருட்டினாள்; அதன் கையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு அதட்டினாள்; ஆனால் அதை அடக்க அவள் மனம் ஒப்பவில்லை; எனினும் அவள் கோபமுந் தணியவில்லை, எனவே அவள் அதைக் கயிறுகொண்டு அவ்வுரலில் கட்ட எண்ணிக் கயிற்றைத் தேடினாள்; அவ்வளவிடமுடியாப் பரம்பொருளை இலேசாகக் கயிற்றால் கட்ட எண்ணங்கொண்டு அவள் கொண்டுவந்த கயிறு, இரண்டங்குலம் குறைவாகக் காணப்பட்டது. அதனுடன் வேறு கயிற்றை முடிந்தபோதும், அதுவும் இரண்டங்குலம் குறைந்தது. எவ்வளவு கயிற்றை மேல்மேல் சேர்த்தாலும், அக்குழந்தையைக் கட்டயத்தனித்தால் இரண்டங்குலம் குறைந்துகொண்டேயிருந்தது. அவள் ஆச்சரியமும், அச்சமும், கவலையும் கொண்டாள். பரம் பொருளைச் சிறு கயிற்றால் கட்டிவிடுவது எளிதா? எனினும், தன் தாயின் கஷ்டத்தி லீடுபட்ட அக்குழந்தை அவளிடம் கருணைகொண்டு தன்னுருவைச் சிறிதாக்கிக்கொள்ள, ஸாதாரணக் குழந்தையைக் கட்டுவதுபோல் ஒரு கனமான உரலில் கட்டிவிட்டுத் தனது வேலையைப் பார்க்க யசோதை சென்றாள்.

கட்டுண்டிருந்த குழந்தையும், வெறுப்புக் கொண்டதுபோலப் பாசாங்கு செய்துகொண்டிருந்தது. தானே கட்டுண்டு தவிக்கும் அக்குழந்தையின்செயலை என்னெனச்சொல்வது? தம்மைப் புகழ்ந்து வழிபடுவாரிடம் பந்தப்பட்டு விளங்குவது போலவே அவர் அவ்வுரலில் பிணியுண்டு கிடந்தார். எனினும் தம்மை ஒருவரும் கவனியாத ஸமயம் பார்த்து மெதுவாக அவ்வுரலை யிழுத்துக்கொண்டு பக்கத்திலிருந்த இரு மரங்களுக்கும் இடையில் அக்குழந்தை சென்றது. அம்மரங்கள் ஒன்றுடன் ஒன்று பின்னிக்கொண்டு வளர்ந்திருந்தன. அவற்றின் இடையிலிருந்த சந்தொன்றில்

ஆயிரம் பனையுள்ள அப்பனுக்குப் பிறந்தும் பல்லுக்குத்த ஒரு ஈர்க்கும் இல்லை.

அவ்வுரல் சிக்கிக்கொள்ள, வெகுமுறட்டுத்தனமாக அக்குழந்தை அதையிழுத்தது. அவ்விசையைத் தாங்காது, அம்மரங்கள் முறிந்து படீரென விழுந்தன. இடிமுழக்கம்போன்ற ஒலியுடன் அம்மரங்கள் விழுந்த சப்தம் கோகுலம் முழுதையுங் கவிந்தது. யசோதை நடுநடுங்கினள்; குழந்தையை வந்து பார்த்தனள். கட்டியவிடத்தில் அது இருக்கவில்லை. அவள் என் செய்வாள்?

மரங்கள் விழுந்த சப்தத்தைக் கேட்டு ஓடிவந்த நந்தன் முதலியோர், அங்கு யாமளார்ஜுனமென்னும் அவ்விரண்டு மரங்கள் வேரற்று வீழ்ந்து கிடப்பதைக் கண்டனர்; அவை அடியற்று விழக் காரணமென்னவெனக் கவலைகொண்டனர்; பக்கத்திருந்த ஆயச்சிறுவரைக் கேட்டனர். பிறகு, அங்குவந்த யசோதை குழந்தையைக் காணாது மரத்தில் அகப்பட்டுக் கொண்டுவிட்டதோ எனச் சிந்தை நொந்தனள்; உள்ளம் நடுங்கினள். ஆயச்சிறுவர் "அக்குழந்தை உரலை யிழுத்துக்கொண்டு வந்தது; அம்மரங்களின் இடையே அது குறுக்கிட, அதை என்ன முறட்டுத்தனமாக அது இழுத்தது! இழுத்த வேகத்தில் இம்மரங்கள் கிடுகிடுத்து, அலைபாய்ந்து, அடிமுறிந்து கீழ் வீழ்ந்தன. இது அதிசயத்தில் அதிசயம்" என்றார். ஆனால் நந்தனாதியர் அதை நம்பவில்லை. மரத்தை ஒரு குழந்தை வேரோடு கிளப்புவதாவதென அவர் ஸந்தேஹங்கொண்டனர். மேலும் அச்சிறுவர் "இம்மரங்கள் விழுந்ததும், அவற்றுள்ளிருந்து புருஷர் இருவர் தோன்றி நல்ல பாடல்களைப் பாடிக்கொண்டே மறைந்தனர்" எனவும் சொல்ல அவரது மொழிகளை யாரும் நம்பமுடியவில்லை. இதுவே மனித லக்ஷணம் போலும்!

ஆனால் அச்சமயம் சற்றுத் திரும்பிப் பார்த்ததும், நந்தன் தன் குழந்தை உரலில் கட்டிய விதமே அம்மரத்திடைத் தவழ்வதைக் கண்டான்; களிப்புண்டான்; அதன் கட்டை அவிழ்த்துக் குழந்தையை எடுத்து மார்போடணைத்து மாறிமாறி முத்த மரும்பினான். அத்தெய்வக் குழந்தையும் அதற்கிணையத் தனது இனிய ஸ்வரத்தில் மழலை யரும்பி, குழலிசையென்ன அவன் உள்ளத்தைக் கவர்ந்தது. அதுவரையுங் கண்டு ஒன்றுந் தோன்றாது நின்ற யசோதை, மயக்கமொழிந்து தன் குழந்தையை எடுத்து வாரியணைத்து வெளியிட முடியாத அன்பிற்காளாகி, தன் கண்களில் ஆனந்தக் கண்ணீரைப் பெருக்கினள்; உள்ளம் நெக்குநெக் குருகினள். யாதவர்களோ இம்மர விஷயமும் கம்ஸனது மாயையால் ஏற்பட்ட கோளென எண்ணி, கடவுட் குழந்தைக்குக் கெடுதியுண்டாகாதபடி ரக்ஷாபந்தனங்கள் செய்தனர்.

பிறகு, அவ்வாயச் சிறுவர் சொன்னது உண்மையன்றோ? அம்மரங்கள் முறிந்ததும் ஏன் இரண்டு புருஷர் தோன்றினர்? புருஷர் மரமாக ஏன் இருக்கவேண்டும்? அதற்கு ஒன்றுதான் பதில்; அது செல்வச் செருக்கு. குபேரனது குமாரர்களாகிய, நளகூபரன், மணிக்கிரீவன் என்னும் இருவரும், கைலாஸகிரிச் சார்பிலிருந்த உய்யானத்தில், மனைவியருடன் கங்கையாற்றில் ஜலக்ரீடை செய்யும் ஸமயம், அங்கு நாரதர் வரக்கண்டதும், மனைவியர் வெட்கித் தமது உடையை அணிய, நளகூபரனும், மணிக்ரீவனும் தமது குடிகாமவெறியால் மயங்கி நக்கினமாகவே கிடந்தனர். மானமற்று, சிற்றின்பத்தில் மூழ்கி, தெய்வநிலைமாறிய அவ்விருவரும், நற்கதியடையவெண்ணி, இம்மரங்களாகும்படி அவர் சபித்தனர். அதற்குள் தமது நிலையை அடைந்த அவ்விருவரும் முனிவரை வணங்கினர்; வாழ்த்தினர்; தம்மைக் காக்கும்படி வேண்டினர். அவரிடத்து இரக்கங்கொண்ட நாரதர், குழந்தைக் கிருஷ்ணனால் நற்கதியடையும்படி அனுக்ரஹித்துச் சென்றனர். அது முதல் அவர் கோகுலத்தில் யாமளார்ஜுனமென்னு மரங்களாகக் கண்ணனது வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர்.

உரலை யிழுத்து, தமது தாவர நிலையை முறித்து, கருணையாண்ட அக்குழந்தையை அவர் வாழ்த்தியதும் உண்மையே; ஆயச்சிறுவர் கூறியதும் உண்மைதான். மனிதனது குறுகிய திருஷ்டியே ஸந்தேஹத்திற் கிடந்தந்தது. ஆனால் பக்தபராதீனனாகிய எம்பெருமான் பக்தர்களுடைய வாக்கிடைக் கொண்ட அன்பினால் நாரதரது மொழியைக் கௌரவிக்கவெனவே மருதிடைத் தவழ்ந்தது என்பதை யாவரும் உணரத்தக்கது. அதுவே தெய்வமானுஷபேதம். தன்னைக் கணிசியாது,

ஆய்ந்து பாராதான் காரியம் தான் சாந் துயரம் தரும்.

தன்னை உண்மையுடன் நேசித்தடைந்தவரைக் காப்பதே கடவுளின் விரதம். அடைந்தாரது நிலையைக் கணிசியாது, தன் நலத்தையே கருதுவது மானுஷவியற்கை யன்றோ?

“ஹே! கண்ண! முகுந்தா! போகமுடையாய்! பரமபுருஷன் நீயன்றே! ஆக்கி, அளித்து அழிக்கும் பொருள் நீயல்லவா!

மேவரு ஞான சுந்த வெள்ளமாய் விதித்தோனுகி
மூவரு மாகி யந்த மூவர்க்குள் முதல்வ னுகி
யாவரும்யாவுமாகி நிறைஞ்சராசிறைஞ்சபபதல்
தேவரு மாகி

நின்றதும் நீயே யன்றோ? பிரகிருதியைக் கடந்த பொருளே! யாம் உம் அடைக்கலம். அநந்த குணங்களுக்கு மிருப்பிடம் நீயென்றால், யாம் எவ்வாறும்மை யறிவது? உடலற்ற பொருளே எனினும், ஸர்வ பூதத்துள்ளும் உறவுகலந்துவிளங்கும் உமக்கு நாமெவ்வளவு? அப்பரம முனிவரது அனுக்ரஹத்தினலன்றே யாம் மூலமுதற்பொருளைக் காணும் பாக்கியமடைந்தோம்” என்று அக்குபேர குமாரர்கள் வாயாரத் துதித்ததற் கிணங்கப் பெரியாரும்

வாயவனை யல்லது வாழ்த்தாது; கை யுலகம்
தாயவனை யல்லது தான்தொழா—பேய்முலைநஞ்
சூணுக உண்டான் உருவொரு பேரல்லால்
காணுகண் கேளா செவி

என முறையிட்டதைக் கவனிப்பதே அறிவின் பெருமைக் கியல்பாகு மல்லாது, கேவலம் பௌதிகங்களில் பாய்ந்து, நாகரீகமென்னும் பேய்வாயிடம் வீழ்ந்து மயங்கி, தன்னிலையுணராது, செல்வக்கள்ளின் பித்திற் சுழன்று, கண்மயங்கி, உண்மை நிலையை உணரமாட்டாது, பின் துக்கமடைந்து ஏங்கி விழிப்பது அன்றெனில் மறுப்பார் எவரோ?

## செட்டிபணியம் வீரவல்லி அரங்காசாரியர், ஸி. ஐ. ஈ.

### C. V. RANGA ACHARLU, C. I. E.

“எப்பொரு[illegible]ாயினும் அப்பொருள் மெய்ப்பொரு[illegible]” என்று உண[illegible]யோர், எக்காரியத்தில் தலையிட்[illegible]ுள்ள குணதோஷங்களை ஆரா[illegible] உண்மையையே கண்டு, அதை மேலேற்று, அவ்விஷயமாகத் தம்மைப் பிறர் நகைமொழி அல்லது வசைமொழியால் என்ன பேசுவரென வெண்ணது நடப்பதே அறிவின் லக்ஷணம். அத்தகைய அறிவாளிகள் பொது ஜனங்களுக்கு வாழ்க்கை வழியைக் காட்டி விளக்குபவராவர். அத்தகையாரது மனோதிடம் முதலியவற்றைஅறிதல் ஒருநாளும் வீண்போகாது. கற்றலிற் கேட்டலே நன்றெனப் பெரியாருங் கூறியுள்ளதை நாம் கவனிப்பது தவறாகாது.

மேற்சொன்னவழியை யனுஸரித்த செட்டிபணியம் வீரவல்லி அரங்காசாரியர் செங்கற்பட்டு ஜில்லாவைச் சேர்ந்த ஒரு சிறு கிராமத்தில் 1831-ஆம் பிறந்தவர். இவர் தந்தை செட்டிபணியம் இராகவாசாரியாரவர்கள், செங்கற்பட்டு ஜில்லா கச்சேரியில் குமாஸ்தாவாக இருந்தவர். அரங்காசாரியர் சிறு குழந்தையாயிருந்தபோது தாயுடன் மாட்டு வண்டியில் பிரயாணம் செய்ய நேர்ந்தது. அப்போது வண்டி குடை கவிழ்ந்து முறிவதற்குள் தெய்வாதீனமாகக் குழந்தை தாய் மடியிலிருந்து எடுக்கப்பெற்றுப் பிழைத்தது, அவர் பிறந்தகாலத்து அரிஷ்ட ஜாதகமாக ஜோஸியர்கள் கவலை கொண்டதற்கு ஒருவாறு ஸமாதானம் காட்டும் போலும்! அல்ப வரும்படியுடன், தம் பிள்ளைக்கு உயர்தரமான ஆங்கிலப் படிப்பைக் கொடுக்க வேண்டுமென்ற ஆவல்கொண்டு, வெகு சிக்கனமாகப் பிழைத்துவந்தபோதிலும், தம்மால் அவ்வாறு செய்ய முடியாமையை இராகவாசாரியர் எண்ணி வருந்தியகாலத்து, தெய்வாதீனமாக அரங்காசாரியரது சிற்றப்பன்மார்களுள் ஒருவர் அப்போது இருந்தாற்போலவிருந்து இறந்தகாலத்து, ஆசாரியரது படிப்பு விஷயமாக ரூ. 800 ஆஸ்தி எழுதிவைத்துப் போக, அதைக்கொண்டு தம் மகனுக்கு படிப்பை விருத்திசெய்யவேண்டி, சிறுவனைப் பள்ளி சேரச் சென்னைக்கு அனுப்பினர். மனச்சமாதானம் இல்லாமல், ஒருவாறு பிள்ளையின் நன்மையை உத்தேசித்து அநேக கஷ்டங்களுக்குட்பட்டுப் பட்டணம் அனுப்பியபோதிலும்,

அப்போது சென்னையில் முதல் இந்திய மாஜிஸ்ட்ரேட்பதவியை வகித்திருந்த வெம்பாக்கம் இராகவாசாரியாரவர்கள் அச்சிறுவனது வித்யா விஷயமாகச் சிரமத்தை ஏற்று, தந்தையின் கவலையை ஒருவாறு குறைத்தனர்.

பள்ளிக்கூடத்தில் அரங்காசாரியர் வெகு புத்திசாலியாக விளங்கினர். மேலும், அச் சின்னுளிலேயே அவர்க்கு அதி சூக்ஷமமான விஷயங்களில் கவனம் சென்றது பாராட்டத்தக்கது. வயதிலும் யுக்தியிலும் சிறந்த தமது வயது முதிர்ந்த உறவினர்கள் சதுரங்கம் விளையாடும் காலத்தில், அருகிலிருந்து யோசனைமிகுந்த அவ்வாட்டத்தைக் கண் கொட்டாமல் அவர் பார்த்துக்கொண்டிருப்பார். ஆடுபவர்கள் ஆட்ட நடுவில் ஆடத்தெரியாது மயங்கும் காலங்களில் பக்கத்திலிருக்கும் சிறுவனை என்ன செய்யலாமென யோசனை கேட்பது வழக்கம். அதற்கிணங்க, ஆசாரியரும் சரியான வழியைச் சொல்லி அவர்களை உத்ஸாகப்படுத்துவர். ஆசாரியர், புஸ்தகங்களில் அதிகமாகப் புத்திசெலுத்தியவர் அல்லர். பள்ளியில் படித்தபோது ஆட்டத்திலேயே அவருக்குக் கவனம். என்றாலும், படிப்பை அலக்ஷயம் செய்தவரல்லர்; வகுப்பில் மற்றெல்லோரைக் காட்டிலும் மேதாவியாக விளங்கியவர். அவரது புத்திசாலித்தனத்தைக் கண்டு அன்புகொண்ட பிரியஞான முதலியாரிடத்து நம்மவர் கடைசிநாள் வரையும் அன்பு பாராட்டி, பல ஸமயங்களில் பண உதவியும் செய்து, அவரிடம் தாம்கொண்ட மரியாதையை வெளியிட்டதல்லாமல், சென்னை, மைசூர் முதலிய இடங்களில் அவரை லக்ஷண குருவாகப் புகழ்ந்திருக்கிறார்.

சில நாளானதும், பச்சையப்பன் கல்லூரியிலிருந்து அவர் தற்காலம் ராஜாங்கக் கலாசாலையாக விளங்கும் அக்காலத்துச் சென்னை ஹைஸ்கூலில் சேர, அவரது புத்திமதி யூகங்களைக்கண்ட தென்இந்திய வித்யாபிமானியான பேடன் பௌவல் துரையவர்கள் மாதவாரி ரூ. 14 உபகாரச் சம்பளம் கொடுக்கும்படி ஏற்பாடு செய்தனர். அப்பள்ளிக்கூடத்தில் ப்ரோபிஷியன்ட் பரீக்ஷையில் முதல் வகுப்பில் தேறி 1849 ௵ அதிலிருந்து வெளி ஏறினர்.

பள்ளியில் அவர்க்குண்டான மதிப்பும் அவரது புத்திகூர்மையைப்பற்றிய பெருமையும், சென்னைஜில்லா கச்சேரித்தலைவரான எல்லிஸ் துரையை அக்கச்சேரியில் ஒரு குமாஸ்தாவாக அவரை உடனே நியமிக்கும்படி செய்தன. ஆனால் அக்கச்சேரியில் காயமான வேலையில் அமர்த்தப்படும் முன்னரே, செங்கற்பட்டு ஜில்லா கச்சேரியில் பக்கா குமாஸ்தாவாக அவர் ஏற்படுத்தப்பட்டனர். அங்கிருந்து ஹெட் குமாஸ்தாவாகச் சேலத்திற்கு மாற்றப்பெற்ற பொழுது அவர் "ரிவினியூ இலாகாவில் லஞ்சமும் துஷ்ட விருத்தியும்". "செங்கற்பட்டு, தஞ்சாவூர் ஜில்லா மிராசி சுதந்தரங்கள்" என்னும் இரண்டு துண்டு புஸ்தகங்களை எழுதி வெளியிட்டனர். இதற்குப் பிறகு சைதாப்பேட்டை தாசில்தாராக இரண்டு வருஷமிருந்து, நெல்லூர் ஹுஸூர் சிரஸ்தேதாராக மாற்றப்பெற்று, ஹெட் சிரஸ்தேதார் பதவிக்குச் சீக்கிரத்தில் உயர்த்தப்பெற்றனர். 1898-ம் ௵ சென்னைக்கென்று புதிதாக ஏற்படுத்தப்பெற்ற இனும் கமிஷனின் அக்கிராசனாதிபதியாகிய ஜி. என். டேய்லர் துரையவர் [illegible] க த்தியோகஸ்தராக நிய [illegible] மது ஒழுக்கத்தாலும், கெட் [illegible] ாலும் அக்கிராசனாதிபதியின் [illegible] ாத்திரரானார்.

இனும் கமிஷ [illegible] ந்ததும், டேய்லர் துரையவர் [illegible] கவர்ன்மெண்டார், இந்திய ரயில்வேக்களின் நடவடிக்கைகளைப்பற்றி விசாரித்து 'ரிபோர்ட்' செய்யும்படியாக நியமித்தகாலத்து, அரங்காசாரியரையே இவ்விஷயத்திலும் தமக்கு உதவிபுரியும்படியாக அவர் பெற்றுக்கொண்டனர். தம்மைப் பற்றிப் பேரன்புகொண்டு மதித்து ஏற்ற துரையின் விருப்பத்துக்குச் சிறிதும் மாறாது ஆசாரியர் அவர்க்கு இணங்கி, கடல் மார்க்கமாக அவருடன் கல்கத்தாவிற்கு, தம் உறவினருள் சிலர் செய்த தடையையும் கவனியாது சென்றனர்; மேலும் உத்தியோக முறைமையில் டேய்லர் துரையவர்கள் சென்றவிடமெல்லாம் அவருடன் சென்று தமது சமத்காரத்தையும், அபார புத்தியையும், தளரா வாய்மை ஒழுங்கையும் அடிக்கடி புது புது வழிகளில் வெளியிட்டு, தமது மேலதிகாரியின் அளவற்ற அன்பிற்கும் மதிப்பிற்கும் பாத்திரரானார். இவ்வேலை முடிந்ததும்

ஆருக்கும் அஞ்சான் ஆர்படைக்கும் தோலான் : : ஆருக்குப் பிறந்து மோருக்கு அழுகிறாய் ?

அரங்காசாரியர் சென்னைக்குத் திரும்பினர்.

நிற்க, ஆசாரியரது குணவிசேஷத்தை பெய்லர் துரையவர்கள் காலாகாலங்களில் புகழ்வதோடு நில்லாமல், தாம் இந்திய ராஜப்பிரதிநிதிச் சபையின் சென்னை அங்கத்தினராக இருந்தகாலத்து, ஆசாரியரது அபிப்பிராயங்களை அடிக்கடி கேட்டு அவற்றைச் சபையில் சவிஸ்தாரமாகச் சொல்லி ஏற்கும்படி செய்தனரென்றால், அது அரங்காசாரியரது பெருமைக்கு இழுக்காகாது.

இதற்குள், ஆசாரியர் மதராஸ் ரயில்வே கம்பெனியின் கமிஷனராக நியமிக்கப்பட்டு, 1864-ம் ௵ கவர்ன்மெண்டில் நாணய இலாகா ஏற்படுத்தப்பட்டபோது, கள்ளிக்கோட்டை கஜானா டிப்டி கலெக்டராக அமர்த்தப்பட்டார்.

நிற்க, மைசூர் சமஸ்தானத் தலைமையைப் பற்றிப் பிரசாரங்கள் நடந்து, அரசுரிமையிலிருந்து நீக்கப்பெற்ற கிருஷ்ணராஜ உடையாரது ஸ்வீகாரபுத்திரன், மஹாராஜாவாகும்படி பிரிடிஷ் ராஜாங்கத்தாரால் ஏற்கப்பெற்று, அம்மஹாராஜா யுக்த வயதாகிய பதினெட்டைக் கடந்ததும் அவரிடம் அரசுரிமையை ஒப்பிக்கவேண்டுமென்றும் தீர்மானம் செய்யப்பட்டது. மேலும் இம்மாதிரியான விஷயங்களில் அடிக்கடி ராஜாங்கத்தார் அநாவசியமாக நுழையாதிருக்கும்பொருட்டு ஷை இளவரசர் ஆங்கிலக் கல்வியின் பயனையும், அரசுரிமையைஏற்கத்தக்க பயிற்சியையும் பெறவேண்டுமென்றும் தீர்மானித்திருந்தனர். ஐம்பது லக்ஷம் ஜனங்களை ஆளத்தகுந்த அரசர்க்கு முறையான பயிற்சியைத் தரக்கூடிய மஹானைப் பொறுக்கியெடுக்கும்படியாக, அக்காலத்து, பிரிடிஷ் ராஜாங்கத்திற்காக மைசூர் ராஜாங்கத்தை நிர்வகித்து வந்த பௌரிங் துரையவர்கள், சென்னை கவர்ன்மெண்டில் அதிக மதிப்புடன் பாராட்டப்பட்ட எல்லிஸ் துரையவர்களுக்கு எழுதியிருந்தனர்; மைசூர் அரண்மனையைப் பொறுத்து ஆளத்தக்க நம்பிக்கையுள்ள சென்னைவாசி ஒருவரைத் தந்துதவும்படி வேண்டினர். இப்பதவிக்கு அரங்காசாரியரைஅவர் சிபார்சுசெய்ததற்கிணங்க, ஆசாரியரும் 1868 ௵ மைசூர் தேச ஸேவையை ஏற்று, தமது வேலையுடன் இராணுவ உத்தியோகஸ்தராகிய மேஜர் எலியட் துரையவர்களுக்கு அவ்வரண்மனையிலுள்ள ஸாமான்கள், விலையுயர்ந்த ஆபரணங்கள் இவை முதலியவற்றின் விவரணப்பட்டியும், அவற்றின் மதிப்பும், அவற்றை ஜாக்கிரதையாக சேமித்துவைக்கத் தகுந்த ஏற்பாடுகளைப்பற்றியும் உதவிசெய்தனர்

இதன் பிறகு ஆசாரியர் அரண்மனை விஷயங்களில் ஏற்பட்ட குழப்பங்களை மாற்ற கவனங்கொண்டு அரண்மனைக்குள் நடந்துவந்த துர்வழக்கங்களைத் தடுத்து, வீணே அவ்விடத்துத் தங்கி அரண்மனைச் சொத்தை நாசஞ்செய்துவந்த வீணர்களை அப்புறப்படுத்தி, அக்காலத்து இளவரசர்க்குப் பராமரிப்புக்காரரும் உபாத்தியாயருமாக விளங்கிவந்த கர்நல் மாலிஸன் என்பவரது விசுவாஸத்திற்கு ஆளாயினர்.

நிற்க, ஆசாரியர் தமது பதவியிலிருந்து ஏற்பட்ட ஞானத்தை வீண்செய்யாது, 1874-ம் வருஷத்தில் "பிரிடிஷாரது மைசூர் ஆட்சி" என்னும் நூலை லண்டன்மா நகரத்தில் வெளியிட்டனர். ஆனால் அதன் முன்னுரையில் அவர் சொல்லியவண்ணம் 'வருங்கால ஆட்சி'யைப்பற்றிய நூல் வெளிவராமைக்கு, அம்முறைமையைத் தாமே ஆளும்படியாக நேர்ந்ததே காரணம் போலும்! மேற் சொன்ன நூலை வெளியிட்டதும், ஆசாரியர் ஸாமான்யரல்லர் என மைசூர் நிர்வாகத்தினரால் மதிக்கப்பட்டு, அப்போது மைசூர் பிரதான கமிஷனராக விருந்த கார்டன் துரையவர்கள், அவரைத் தமது ரிவினியூ காரியதரிசியாக ஏற்று, பல சீர்திருத்தங்களை அவரது அபிப்பிராயத்துக்கு இணங்கிச் செய்தனர். அவை: (1)மூன்று ஐரோப்பிய கமிஷனர்களது பதவியை எடுத்துவிட்டு அவர்கள் செய்து வந்த அதே வேலைக்கு, இந்திய காரியதரிசியும், ரிவினியூ கமிஷனருமான ஒருவரை நியமித்தது; (2) டிப்டி கமிஷனர் சம்பளம் ரூ. 1,000 - 1,666 த்திலிருந்து ரூ. 700-1,000-க்குக் குறைக்கப்பட்டது; (3) இருபத்தேழு உதவி கமிஷனர் பதவிகளில், எட்டை எடுத்துவிட்டுப் பத்தொன்பது பதவிகளிலும் பெருந்தொகைச் சம்பளம் வாங்கி வந்த ஐரோப்பியர்களுக்குப் பதிலாகச் சாதாரண சம்பளத்தையுடைய இந்தியர்களை ஏற்படுத்தியது; (4) டிப்டி கமிஷனருள் நால்வர் தவிர

ஆரும் ஆரும் உறவு ? தாயும் பிள்ளையும் உறவு.

மற்று எல்லோருக்கும் பதிலாகத் திறமைவாய்ந்த இந்தியர்களை நியமித்தது; (5) இவ்விதமே மற்றெல்லா இலாகாக்களிலும் முக்கியமாக வித்தியா, காடு, பொதுவேலை இலாகாக்களில், அதிகமான சம்பளங்கள் பெற்றுவந்த ஐரோப்பியருக்குப் பதிலாக நிர்வாகத் திறமை வாய்ந்த இந்தியர்களை ஏற்படுத்தியது. இவ்வாறு அநாவசியமான அதிகச்செலவைக்குறைத்து நியாயமான செலவை ஏற்படுத்தி அரசுரிமையின் நன்மையை உத்தேசித்துச் செய்த ஆசாரியரது சீர்திருத்தங்களினால், அம்முதல் வருஷத்திலேயே செலவு திட்டத்தில் குறைவு இரண்டரைலக்ஷம் அவர் காட்டியதற்குக் கார்டன் துரையவர்களது கூட்டுறவும், மேற்பார்வையும் காரணமாகும். இவ்விஷயமாக ஆசாரியர் எடுத்துக்கொண் டுழைத்த சிரமத்தை மஹாராணியார் மதித்து 1880-ம் ௵ அவர்க்கு ஸி. ஐ. ஈ. (இந்திய ஸம்ராடனேசுன் என்னும் பட்டம் அளித்தனர்.

ஆனால் ஆசாரியரது அபார புத்தியிடம் அசூயை கொண்ட மைசூரார் சிலர், வெளிப்பிரசுரங்களில் 1872-1873 வருஷங்களில் அரண்மனையிலிருந்து விலையுயர்ந்த ஆபரணங்கள் பிறரறியாது அபகரிக்கப்பட்டனவென்று முதல் முதல் 1880-ல் வெளியிட்டு, அக்களவாடலுக்கு அக்காலத்து அரண்மனை உத்தியோகஸ்தராகவிருந்த ஆசாரியரே உத்தரவாதமாயிருக்கவேண்டுமென்றும் புகாரிட்டனர். இப்புகார் உண்மையற்றதாயிருந்தபோதிலும் அச்சமயம் மிக்க கலக்கத்தையுண்டாக்கக்கூடிய விஷயமாகவே கவனிக்கப்பட்டது. தமது முகாந்திரமாக ஆசாரியர் மைசூர் ராஜ ஸேவைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டதால், தாம் இவ்விஷயமாக மைசூர் பொது ஜனங்களுக்கு ஸமாதானம் சொல்லவேண்டியது தமது கடமையென்றெண்ணி, தமது உத்தியோக முறைமையில் எழுதிய கடிதமொன்றில், ஆசாரியரைத் தருவித்ததற்குத் தாம் காரண பூதராயிருந்த போதிலும், திவான் பதவியில் அவரை நியமித்ததற்குத் தாம் உத்தரவாதமல்லவென்று எல்லிஸ் துரையவர்கள் தமது பொறுப்பை வெளியிட்டனர். இதனால் அவர் ஆசாரியரிடம் வெறுப்புக் கொண்டனரென்று எண்ணலாகாது. இதற்கு ஆசாரியர் காலகதியடைந்தபோது மேற்படி துரையவர்கள் வெளியிட்ட அளவு கடந்த துக்க விளக்கமே சான்றாகும். நிற்க, மேற்சொன்ன பிரமாதப்படுத்தப்பட்டகளவு, கணக்கெழுதுவதில் ஏற்பட்ட அற்பப்பிழையினால் உண்டான விபரீதமென அவ்விஷயத்தை விசாரிக்கும்படி நியமிக்கப்பெற்ற வில்ஸன் துரை முதலியோர் வெளியிட்டதல்லாமல், நெருப்பிற்பட்ட தங்கமென ஆசாரியர் உத்தம குணம் வாய்ந்தவர் எனவும் வெளியிட்டனர். எதிர்பாராமல் வரும் கெடுதி, நன்மையே பயக்கும் என்றவாறு, அவ்விசாரணை முடிந்ததும் 1881-௵ மார்ச்௴ 25-௳ ஆசாரியர் மைசூர் திவானாக மரியாதை செய்யப்பட்டனர்.

மைசூர் நிர்வாகத்தை அரங்காசாரியர் சீர்படுத்திய விஷயத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்யவேண்டுமானால், அவ்வரசுரிமைஉடையார் வம்சத்தாருக்கு அளிக்கப்படுவதன்முன் அப்பிராந்தியம், வருமான, விவசாய, தொழில்வகையராக்களில் எம்மாதிரி விளங்கிற்றென நாம் கவனிப்பது இன்றியமையாததாகும். அக்காலத்தில் எல்லா இலாகாக்களிலும்மட்டுமிஞ்சிய செலவும், அளவு கடந்த சிப்பந்திகளும், இராஜாங்கத்தின் வருமானங்களை முற்றும் கவர்ந்ததல்லாமல், தாது (1877-)வருஷத்திய பெரும் பஞ்சம் இந்தியாவில் எந்தப் பாகத்தைக் காட்டிலும் அங்கு மிகக் கடுமையாக வாட்டியதால் கஜானாவில் பணப்பஞ்சம் ஏற்பட்டுவிட்டது. மற்று, லக்ஷக்கணக்கான ஜனங்கள் பஞ்சக்கொடுமையைத்தாங்கமுடியாமல் இறந்ததல்லாமல், அவ்வாறு இறந்தவருள் தம் கைத்தொழிலாலேயே நாடோறும் பிழைத்துவந்தவரே ஆனபடியாலும் மேற்படி பஞ்சம் அந்நாட்டுக் கைத்தொழிலபிவிருத்தியைப் பல வருஷங்கள் வரை தலையெடுக்கவொட்டாமல் செய்துவிட்டது. உணவுப்பொருள்களுக்காக ஜனங்களுக்கேற்பட்ட கஷ்டத்தை நிவர்த்தி செய்ய, இராஜாங்கத்திலிருந்து 150-லக்ஷம் செலவிடவேண்டியிருந்தது. அரங்காசாரியர் தாமேற்படுத்திய சீர்திருத்தங்களால் கிடைத்த செலவுக் குறைவும், இக்காரணத்தால் தலையெடுத்துக்காட்ட முடியாமற் போய்விட்டது. எனினும் தேச க்ஷேமத்தை உத்தேசித்து, செலவைக் கவனியாது சில சீர்திருத்தங்கள் செய்யவேண்டி வந்தன. இராஜாங்கத்தால் உடை

ஆர் கடன் வைத்தாலும், மாரி கடன் வைக்கக்கூடாது.

யார் வம்சத்தார் மீண்டும் அரசாட்சியைக்
கைக்கொள்ளச் செய்துகொண்ட உடன்படிக்
கைப்படி இந்திய இராஜாங்கத்தாருக்குக்
கொடுக்கவேண்டிய கடன் எண்பது லக்ஷத்
திற்கு வருஷாவருஷம் நான்கு லக்ஷம் வட்டி
கட்டவேண்டி வந்தது. இத்தகைய சந்தர்ப்
பங்களில் திவானாக விளங்க அடங்கா உத்ஸா
கங்கொண்ட எவனும் கடுங்குவனென்பது நிச்
சயம். எனினும், அச்சமயங்களில் ஆசாரிய
ருக்குத் திவான் வேலையில் உதவி செய்தது,
சிறுவராக இருப்பினும் புத்திகூர்மைகொண்டு
விளங்கிய மஹாராஜாவினது ஆழ்ந்துணரும்
சக்தியும் கூட்டுறவுமே யாகும்.



இரண்டு வருஷங்களுக்கு
முன்னர், சபைகூடி மைசூர்
கமிஷனால் தீர்மானிக்கப்
பட்ட சீர்திருத்தங்களை
அமுலுக்குக் கொண்டுவர,
முதல் முதல் ஆசாரியர் பிர
யத்தனப்பட்டனர். ஹாஸன்
சித்திரதுர்க்கம் ஜில்லாக்கள்
ஸிவில், கிரிமினல் நிர்வாகங்
களுக்கு ஒன்றாக்கப்பட்டன.
ஒன்பது தாலூக்காக்கள் உப
அமீல்தார் ஸ்தானங்களாக
மாற்றப்பெற்றன. நான்கு
முனிசீப் கோர்ட்டுகளும்,
மூன்று ஸப் கோர்ட்டுகளும்
ஜில்லா ஜெயில்களில் எட்
டில் ஐந்தும், எடுபட்டுப்
போயின. முஸாபரி பங்களாக்களின் சிப்பந்
திகள் ஒழிக்கப்பட்டன. இவ்வாறு நியாய
இலாகாவில் செய்த திருத்தங்களன்றி, காட்டு
இலாகாவிலும் சில துஷ்கிருத்தியங்களையும்,
அநாதரணையையும் கவனித்து, தொன்று
தொட்டுச் சந்தனக் காடுகளிலிருந்து கிடை
த்த சந்தனக் கட்டைகளை அரண்மனைக்குள்
ளேயே சேமித்து வீண் செய்யும் வழக்கத்
தைக் கண்டித்து, அளவுக்கு மிஞ்சி மிகுந்த
வற்றை விற்பனைக்குக் கொண்டு வரும்படி
யான ஏற்பாடுகளைச் செய்தனர் மைசூர் வாச
னைத் திரவ்யங்கள் அப்பிராந்தியத்திலிருந்து
வெளிப்பிராந்தியங்களுக்கு உதவ ஆசாரியரே
பொறுப்பேற்றனரெனச் சொல்லலாம். அத
னால் சமஸ்தானத்திற்கு அளவுகடந்த லாபத்
துக்கு இடமேற்பட்டது.

இவ்வெல்லாச் சீர்திருத்தங்களைக் காட்டி
லும், பொது ஜனங்களுக்காக அவர் செய்த பே
ருதவி, அநேக நாளாக அச்சமஸ்தானத்தில்
போடவேண்டுமென்று பேசிவந்த ரயில் பா
தையை இராஜாங்க உதவியினால் முன்பணம்
கொடுத்துப் போட்டுவைத்ததே யாகும். இத
னால் மூலைக்கு மூலை போக்கு வரத்து ஏற்
பட்டு, வியாபாரம் செழித்து, விவசாயத்
திற்கும் ஸ்தலத் தொழில்களுக்கும் உத்
வேகம் உண்டாகியது. எனினும், மைசூ
ரார் விவசாய விஷயத்தில் கவனமற்று
விளங்குவதைக் கண்டு
அந்நிலைமையைப் போக்க,
பல முயற்சிகள் செய்தனர்.
இவ்வாறு பல சீர்திருத்தங்
களை அவர் செய்தனரே
னும், அச்சீர்திருத்தங்க
ளிற்கு வேண்டிய வருமான
த்தைப் பெறும் பொருட்டு
விதித்த வரியை ஜனங்கள்
தலைச்சுமையாக எண்ணாமல்
ஸந்தோஷத்துடன் கொடுக்
கும்படியாக விதித்தது யா[illegible]
ரும் பாராட்டத்தக்கது.

மேலும் சமஸ்தானத்து
ஏழ்மையான ஸ்திதியை
உத்தேசித்து, அதன் வரு
மானத்திலிருந்து எவ்வாறு
உடன்படிக்கைப்படி இந்திய இராஜாங்கத்
தாரிடம் ஒப்புக்கொண்ட எண்பது லக்ஷ
ரூபாய் கடனைத் தீர்ப்பதென அவர் கவலை
கொண்டனர். வட்டியே வருஷத்துக்கு
நான்கு லக்ஷம் கொடுக்க வேண்டியிருந்
தது. வருமானத்திலிருந்து வட்டியைக்
கொடுத்துச் சமாளிப்பதே சமஸ்தானத்துக்
குக் கஷ்டத்தைத் தருமென்றெண்ணி,
பிரிடிஷ் இராஜாங்கத்தாருடன் கடிதப்போக்கு
வரத்தினால் சமஸ்தான நிலைமையை விவரித்
துக் காட்டி வட்டி விகிதம் 100-க்கு ஐந்திலிரு
ந்து நான்காகக் குறைக்கும்படிச் செய்தனர்.
இவ்வேற்பாட்டினால், கட்டவேண்டிய வட்டி
யில் சுமார் லக்ஷரூபாய் குறைந்தது.

ஆளான ஆட்களுக்கு அவிழ் அகப்படாக் காலத்திலே, காகா பிசாசு கஞ்சிக்கு அழுகிறது.

இவ்வாறு மேல் இராஜாங்கத்துக்குச் செலுத்தவேண்டிய வட்டி, முதல் விஷயமாக ஏற்பட்ட கவலை சிறிது தணிய, ஆசாரியர் இருபது லக்ஷம் கடனெழுப்பி, சமஸ்தானம் முழுதும் ரயில் பாதைகள் பல இடங்களிலும் நிர்மாணித்து, பொது ஜனங்களின் பேரன்பிற்கு இடங்கொடுத்தனர். இதைக்காட்டிலும் அத்யத்புதமான வேலை அவர் செய்தது "மைசூர் பிரதிநிதிச் சபை" யேயாகும். இதனால் ஜனங்களது சுகதுக்கங்களை உணர்ந்து நிர்வாககர்களது நிர்வாகத்தைப்பற்றி ஜனங்களது அபிப்பிராயத்தை உணர்ந்து நடந்துகொள்ளுமாறும் அவர் செய்தனர். "இம்மாதிரியானசபை, ஆள்பவரையும் ஆளப்படுபவரையும் ஒருங்குசேர்ப்பது, இராஜாங்கத்தாரது நோக்கம், செயல்க ளிவற்றைப்பற்றி ஜனங்கள் மனதிற்கொண்ட தவறுன எண்ணங்களைப் போக்கி இராஜாங்கத்தாரது அபிப்பிராயங்களும் ஜனங்களது எண்ணங்களும் ஒன்றுகவே விளங்குமெனச் சித்தாந்தப்படுத்துவதற்கும் உபயோகமாகும்" என ஆசாரியர் வெளியிட்டதை இராஜதந்திர நிபுணரெவரும் கொண்டாடுவரென்பது திண்ணம்.

இயற்கையிலேயே தெய்வபக்தியி லீடுபட்டு விளங்கிய ஆசாரியர் தமது திவான் கால அளவையானதும், சென்னை வந்து பாரமார்த்திக வழியில் விளங்க எண்ணியவர், தாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்குமென்றபடி, இருந்தாற்போலவிருந்து தேக அஸௌக்யமடைந்து, மாற்றத்திற்காகச் சென்னைக்குக் கொணரப்பட்டு, 1882-ம் வரு சில மாதம் படுக்கையில் கிடக்க, ஊக்கமொடு விளங்கிய அவரது வாழ்க்கைக்கும் யமன் முடிவை ஏற்படுத்திவிட்டான்.

ஏதோ ஒரு சென்னைவாசி, தம் நாட்டுக் காரியங்களில் தலையிட்டுச் சமஸ்தானத்தை அதோகதியில் ஆழ்த்தி விடுவனென்ற நம்பிக்கையி லாழ்ந்துவிளங்கி, அவனூறு கிளப்பி வெளியாக்கிவிடுவதென வெறுப்புக்கொண்டு விளங்கிய மைசூர் வாசிகள் தாம் நடந்துகொண்ட இழிவான ஒழுக்கத்தைப்பற்றி நாம் பேசவேண்டியதில்லை.

அரங்காசாரியர் ஸாமன்ய மனிதர் அல்லர். அவர் எப்பொழுதும் பொது ஜனங்களின் நன்மையையே கவனித்து நடந்தவர்; கோபம் தாபம் என்னும் வழிகள் இன்னவென அறியாத ஆசார சீலர். அவரது நஷ்டத்தை எண்ணி எண்ணி மைசூர் நாடே கதறியது. முன் தம் இனத்தோர் வீணே பழிசுமத்திச் சிறுமை பாராட்டியதற்குப் பிராயச்சித்தமென, மைசூரார் யாவரும் கூடி அவரது ஞாபகத்தைக் கொண்டாடவேண்டியஏற்பாடுகள் செய்தனர். ஆனால் ஆசாரியர் அவரது நசைமொழியை யாவது வசைமொழியையாவது கவனித்து நடந்தவரல்லர்; தருமத்தையே தலைப்பொறுப்பாய் நடத்தியவர். உத்தமருள் அவர் உத்தமராவரென்றால் மறுத்தலும் ஆமோ?

---

# இந்தியரின் வீரத்தன்மை

## INDIAN HEROISM

இப்போது எங்கு பார்த்தாலும் ஐரோப்பாவில் நடக்கும் பெரிய யுத்தத்தைப்பற்றித்தான் எல்லோரும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அதிலும் நமது ஜன்ம பூமியான இந்தியாவானது யுத்தத்தில் எவ்வளவு தூரம் சம்பந்தப்பட்டு, ஒத்தாசை செய்திருக்கிறது என்று பார்ப்பதிலேயே கவனமாயிருக்கிறார்கள். இந்த யுத்த விஷயமாகத் தன்னாலியன்ற மட்டும் இந்தியாவானது திரவிய சகாயம் செய்திருக்கிறது என்பதைப்பற்றி ஒருவித ஆக்ஷேபணையு மில்லை. யுத்த நிதிக்கும் யுத்தக் கடனுக்கும் நம்மவர்கள் பணங்கொடுத்துதவ எங்காவது சற்றேனும் பின் வாங்கியதுண்டா? முதல் யுத்தக்கடனில் சுமார் 45 கோடி ரூபாய்க்கு மேலேயே வசூலாயிற்று. இப்போது வசூலிக்கப்படும் இரண்டாவது யுத்தக்கடனாக 51½ கோடி ரூபாய்க்கு மேல் உதவ நம்மவர் முன் வந்திருக்கிறார்கள். அதாவது இவ்விரண்டு யுத்தக்கடனில் மாத்திரமே 96½ கோடி ரூபாய்க்கு மேல் வசூலாயிருக்கிறது. இந்தியாவோ பரம ஏழையான தேசமென எல்லோரும் அறிந்ததே. அதன் ஜனத்

தொகை 30 கோடியாயினும், பெரும்பாலோர் வெகு ஏழை. சராசரியில், அவர்களில் ஒவ்வொருவனுக்கும் உள்ள மாத வரும்படி சுமார் மூன்று ரூபாய்தான் என்று கவர்ன்மெண்டாருக்கே தெரியும். இப்படியிருக்கும்பொழுது, இவ்வேழை ஜனங்கள் சுமார் நூறு கோடி ரூபாய் வரையில் கடன் கொடுத்திருக்கிறார்கள் என்பது ஆச்சரியமே. இந்தியர்கள் தம்மாலியன்றமட்டும், தாங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் சரி, இந்த யுத்தத்தால் உண்டாகும் கஷ்ட நிஷ்டூரங்களை இங்கிலாந்தோடு சரி ஸமானமாய் நின்று அனுபவிக்க வேண்டுமென்ற ஆவலும், மனோ தைரியமும், திடசித்தமும் ஆகிய இவற்றை இவ்விஷயம் வெளிப்படுத்த வில்லையா?

அப்படியிருக்குங்கால், இந்தியாவிலிருந்து சண்டைக்காக, எவ்வளவு பேர் யுத்தத்துக்குப் போயிருக்கிறார்கள் என்று கணக்குப் பார்த்தால், அது நமக்கு அவ்வளவு சந்தோஷத்தைக் கொடுக்கும்படியாயில்லை. பஞ்சாபிலுள்ள இராணுவ வீரர்களும், மஹாராஷ்டிர தேசத்திலுள்ள வீரர்களும், இன்னும் சிலரும் யுத்தத்துக்குப்போய் அழியாப் புகழ் அடைந்திருந்தாலும், மொத்தத்தில் பார்க்கும்போது, 30 கோடி ஜனத்தொகையுள்ள நமது ஜனன பூமியிலிருந்து இன்னும் பலபேரும் சண்டைக்குப் போயிருக்கலாம் என்றே தோன்றுகிறது.

ஆதலின், இந்தியர்களுக்குச் சண்டையில் தம்மாலியன்றவரையில் ஒத்தாசை செய்ய மனமிருந்தும், இராணுவ வீரர்களை ஜாஸ்தியாக அனுப்பமுடியவில்லை என்பது வெளிப்படையாய்த் தெரியவருகிறது. இதன் காரணமென்னவென்று சற்று ஆராய்ந்தறிந்தால் பல அபூர்வமான விஷயங்கள் நமக்குப் புலப்படும். 'இந்தியர்களுக்குச் சண்டை செய்யும் திறனே எப்பொழுதும் இல்லை' என்பார் ஒரு சாரார். 'முன்னாளில், அதாவது இராமாயணம், பாகவதம் முதலிய இதிஹாஸ புராணங்கள் எழுதப்பட்ட நாட்களில், அதாவது 3000 அல்லது 4000 வருஷங்களுக்கு முன்னே, இந்தியர்கள் சண்டைசெய்யும் வலிமை உடைத்தாயிருக்கலாம். ஆயினும் சரித்திர வாயிலாக நமது தேசத்தைப்பற்றி நமக்குத் தெரிந்த வரையில், அவர்களுக்கு இராணுவத்தன்மை என்பது இல்லவேயில்லை' என்பார் ஒரு சாரார். 'பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் ஆயுதச் சட்டத்தை ஏற்படுத்தி, லைஸென்ஸ் வாங்காமல் ஒருவராவது துப்பாக்கி முதலான ஆயுதங்களை எங்கேயும் வைத்துக்கொள்ளக் கூடாது என்னும் நிபந்தனையை ஏற்படுத்திய தன் பிறகே இந்தியர்களுக்கு இராணுவத்தன்மை குறைந்து போய்விட்டது. அதற்கு முன், அவர்கள் மஹா வீரம்பொருந்திய பராக்கிரமசாலிகளே' என்று சாதிக்கிறார்கள் ஒரு சாரார். இம்மூவர்களுள் யார்சொல்வது சரி என்பதைச் சற்றே கவனிப்போம்.

இந்தியர்களுக்குச் சண்டைசெய்யும் திறன் எப்போதுமேயில்லை என்பது அசம்பாவிதம். நமது காவியங்கள் பலவற்றிலும் சண்டை, யுத்தம் முதலியவைகளைப்பற்றி அதிக அழகான வர்ணனைகள் இருக்கின்றன. இராமாயணத்திலிருக்கும் இராம இராவண யுத்தத்தின் வர்ணனையும் பாரதத்தில் பாண்டவ கௌரவர்களுடைய யுத்தத்தின் வர்ணனையும்; ஒழுங்கும், கிரேக்க கவியாகிய ஹோமருடைய யுத்த வர்ணனையைப் பார்க்கிலும் சிறப்புற்றனவேயன்றிச் சற்றும் தாழ்ந்தனவல்ல என்பார் அறிவுடையோர். மற்றும், இந்தியர்களுக்குச் சற்றும் சண்டைசெய்யும் வலிமையேயில்லையென்றால், அவர்கள் பெரிய ராஜ்யத்தை ஸ்தாபித்ததெப்படி? அசோகன், விக்ரமாதித்தியன், சந்திரகுப்தன், இவர்களெல்லாரும் இப்போது பிரிட்டிஷ் இந்தியா எவ்வளவு பெரிதாயிருக்கின்றதோ அவ்வளவு பெரிய ராஜ்யத்தை ஸ்தாபனஞ் செய்து, சரிவர நிர்வாகம் செய்து வந்தார்கள் என்பது சரித்திரப்பிரஸித்தமல்லவா? இராணுவத் தன்மை கொஞ்சமும் இல்லையெனின் இவையெல்லாம் சாத்தியமா?

தவிரவும், அலெக்ஸாண்டர் இந்தியாமீது படையெடுத்து வந்தபோது, அவன் போரஸின்மேல் வெற்றியையடைந்தாலும், தன் எதிரியை வெகு மரியாதையோடு நடத்தியதாகத் தெரியவருகிறது. கொஞ்சமும் இராணுவத்தன்மை இல்லாவிடில், மகா வீரனாகிய அலெக்ஸாண்டரோடு போரஸ் சண்டை செய்யத் துணிவனா? அப்படித் துணிந்தாலும், அவனை அலெக்ஸாண்டர் மதித்து மரியாதை செய்வனா? ஸமீப காலத்தில், கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில், மஹமத் கோரி என்னும் மஹமதிய அரசன் இந்தியர்களோடு

ஆறு போவதே போக்கு, அரசன் சொல்வதே தீர்ப்பு.

தனேச்வரம் என்ற இடத்தில் சண்டை போட்டுத் தோற்கடிக்கப்பட்டான் என்றால், அக்காலம் ஆப்கானிஸ்தானத்திலுள்ள பட்டாணியர்களைவிடச் சிற்சில ஸமயம் ஹிந்துக்களுக்கு இராணுவத்தன்மை அதிகமாயிருந்த தென்ப தேற்படு மன்றோ? மேலும் மொகலாய ராஜ்யம் செழித்திருந்த அக்பர் காலத்தில், அவருடைய தளகர்த்தர்களுள் பலரும் மிகப் பெயர்பெற்ற ஹிந்து வீரர்களன்றோ! ராஜா டோடர் மால், ராஜா மான் சிங் முதலியவர்களை வைத்துக்கொண்டே அக்பர் தனது ராஜ்யத்தின் மகிமையையும் விஸ்தீரணத்தையும் அதிகரித்தானென்பது சரித்திர வெளிப்படை. அக்பர் கி. பி. 1555-ஞு முதல் 1605-ஞு வரையில் அரசாண்டிருப்பதால், பதினாறுவது நூற்றாண்டிலும் இந்தியர்களின் இராணுவத்தன்மை சாமான்யமானதல்ல என்பது நன்கு புலப்படும்.

இதற்குப்பின் அவுரங்கசீப் காலத்தில் (1658-1707), மஹாராஷ்டிரர்கள் கொஞ்சங் கொஞ்சம் தலையெடுக்க ஆரம்பித்துவிட்டார்கள். வரவர, பதினெட்டாம் நூற்றாண்டில் மொகலாய ராஜ்யம் க்ஷீணித்துக்கொண்டும் மஹாராஷ்டிர ராஜ்யம் செழித்துக்கொண்டுமிருந்தது. பிரிட்டிஷ்காரர்கள் பதினெட்டாம் நூற்றாண்டின் மத்தியில் இந்தியாவில் ராஜ்யபாரம் ஆரம்பித்தபோது, அவர்கள் மஹாராஷ்டிரர்களோடு சண்டை செய்யவேண்டியதாய் இருந்ததே ஒழிய மொகலாயரோடு சண்டைபோடத் தருணமே இல்லாமலிருந்தது. இவ்விஷயங்க ளெல்லாவற்றையும், பம்பாயில் ஹைகோர்ட் ஜட்ஜாயிருந்து, சமீபத்தில் காலஞ்சென்ற மஹாதேவ கோவிந்த ரானடே அவர்கள் தமது அரிய புஸ்தகத்தில் எழுதியுள்ளார். மஹாராஷ்டிரர்களைக் கடைசியில் போரில் வென்றது 1818-ம் வருஷத்தில் தான். அதாவது இற்றைக்குச் சரியாய் நூறு வருஷத்துக்கு முன் என்று தெரியவருகிறது.

பஞ்சாப் மாகாணத்திலுள்ள சீக்கியர்கள் 1840-50 வருஷங்கள் வரையில் சுயேச்சையாயிருந்து அதற்குப்பின்தான் யுத்தத்தில் தோற்றுப்போனார்கள். தென்னிந்தியாவிலோ விஜயநகர சரித்திரத்தினின்றும், மைஸூர் சரித்திரத்தினின்றும் இன்னும் பல அபூர்வமான மேற்கோள்களினின்றும் பத்தொன்பதாவது நூற்றாண்டு வரையில் இந்தியர்கள் நல்ல இராணுவ வீரர்களாயிருந்தார்கள் என்று நன்கு புலப்படுகிறது.

இன்னும் இவ்விஷயத்தில் சந்தேகம் இருந்தால், ஓர் உதாரணத்தைக் கூறலாம் என்று நினைக்கிறேன். 1818-ம் வருஷத்தில் இங்கிலீஷ்காரர்கள் நேபாள தேசத்தின்மீது படையெடுக்க எண்ணி, அக்டோபர் மாதக் கடைசியில், தமது சேனைக ளெல்லாவற்றையும் ஒருங்கே சேர்த்து, வரிசை வரிசையாய் நேபாளத்தின்மீது கொண்டுபோனார்கள். இப்படிச் செய்வதில் அவர்கள் உத்தேசம் என்னவென்றால் இவரது சேனையைப் பார்த்தவுடனேயே நேபாள தேசத்தவர்கள், தங்களுடன் சண்டை போட முடியாது, தாங்கள் சொன்னபடி கேட்கவிரும்பி உடன்படிக்கைக்கு வருவார்கள் என்பதே. ஆனால் அவர்களோ இதை வெகு அலக்ஷியமாய்ப் பாராட்டிவிட்டார்கள். ஆதலின் மேஜர் ஜெனரல் ஜில்லெஸ்பி என்பவர் மற்ற மூன்று தளகர்த்தர்களோடு நேபாளத்துக்குள்ளேயே பிரவேசிக்க ஆரம்பித்தார்கள். அக்டோபர்மாதம் 24-ம் தேதியில் கர்னல் மௌபி என்பவர் தம் சேனையோடு டெஹராடூன் (Dehra Dun) என்ற இடத்துக்கு வந்து சேர்ந்திருந்தார். டெஹராடூனுக்கு மூன்றரைமைலுக் கப்பாலிருக்கும் 'நளபாணி' என்ற மலையோரத்தில், 'குலுங்கா' என்னும் சிறு கோட்டையில் நேபாளதேசத்துச் சிற்றரசனான பலபத்திரசிங் தனது சிறு சேனையாகிய 300 ஆட்களோடு இருந்தான். இதைக் கண்டவுடன் கர்னல் மௌபிக்குக் கோபாவேசம் மூண்டு விட்டது. "கேவலம் 300 ஆட்களுக்குட்பட்ட சேனையை வைத்துக்கொண்டு நம்முடன் இவன் எதிர்த்து வரத் துணிகிறதா" என்று நினைத்து, பலபத்திரசிங்கை உடனே உடன்படிக்கைக்கு வரும்படி ஒரு கடிதம் எழுதி அனுப்பினான். ஆனால் நமது பலபத்திரசிங்கோ அதைக் கொஞ்சங்கூடப் பாராட்டாமல், "நாம் சண்டைபோடத் தயாராயிருக்கிறோம்" என்ற மறுமொழியை அனுப்பினான்.

ஆகவே, அடுத்த நாட்காலையில் கர்னல் மௌபி தன் சேனையோடு 'நளபாணி' மலையோரத்துக்கு வந்து, பீரங்கிகளைச் சரியான இடத்தில் ஸ்தாபித்தான். இப்படிச் செய்தும்

எதிரி உடன்படிக்கைக்கு வாராததைக் கண்டு ஆச்சரியப்பட்டு மேஜர் ஜெனரல், ஜில்லெஸ்பிக்கு எழுதி, அவரையும் வரவழைத்தான். அடுத்த நாளே அவரும் வந்துசேர்ந்தார். வந்தவுடனே அச்சிறு கோட்டையை முற்றுகை போடப் பிரயத்தனம் செய்து, கர்னல் கார்பெண்டர், காப்டின் பாஸ்ட் (Faust), மேஜர் கெல்லி, காப்டின் காம்பல் என்ற நால்வரையும் நான்கு பக்கங்களிலிருந்து எதிர்க்கும்படி உத்தரவளித்தார். மேஜர் லட்லோ என்பவர் தமது சேனையைத் தனியே வைத்துக்கொண்டு அபாய சமயங்களில் உதவிசெய்யச் சித்தமாயிருந்தார்.

முற்றுகையாரம்பித்தது. இங்கிலீஷ்காரர்கள் துப்பாக்கியால் சுடும்போதெல்லாம், எதிரிகளும் சற்றும் அஞ்சாமலே இவர்களைப் பார்த்துச் சுட்டுக் கொண்டேயிருந்தார்கள். எதிரிகள் முன்னூற்றுவரே யாயினும், கொஞ்சமும் பின் வாங்கவில்லை. இதைக் கண்டவுடன் இங்கிலீஷ்காரர்களுக்கு ஆச்சரியம் ஒரு பக்கத்திலும், விசனம் ஒரு பக்கத்திலும் ஜாஸ்தியாகி, "இனி [illegible] சுடுவதில் பிர[illegible]மில்லை, சுவர்களின் மேலேறிக் [illegible]ல்தான் ஏதாவது நன்மையுண்டாகு[illegible]று நினைத்து, மேஜர் ஜெனரல் ஜில்லெஸ்பியும், லெப்டினென்ட் எல்லிஸும் சுவர் ஏற ஆரம்பித்தார்கள். இதைப் பார்த்தவுடனே நேபாலியர்கள் இவர்களின் மேல் குறிவைத்துச் சுட்டுவிட்டார்கள்.

ஆதலின், கர்னல் மௌளி 'இவர்களோடு சண்டை போட, நம்மா லாகாது' என்று நினைத்துச் சேனையோடு பின்வாங்கினன். இதற்குப்பின் டில்லிக்கு எழுதி மற்றும் சேனையை வரவழைத்தான். அவர்கள் வந்து சேருவதற்கு ஒரு மாதமாயிற்று. புதுச்சேனை வந்தவுடனே மற்றொருதரம் எதிர்த்துப் பார்த்தார்கள். அதுவும் சாத்தியப்படவில்லை, ஆகையால் மறுபடியும் இங்கிலீஷ்காரர்கள் பின்வாங்க நேரிட்டது.

கோட்டையிலோ முதலிருந்த முந்நூற்றுவரில் சண்டையில் விழுந்தவர்கள் போக மிஞ்சியது எழுபதின்மரே. அவர்களுக்கும் குடிக்கத்தண்ணீர் ஏற்றுப்போய்விட்டது. அக்கோட்டையிலிருப்பவர்களுக்குக் குடிக்கும்ஜலம் 'நளபாணி' மலையோரத்தில் ஓடும் ஒரு சிறு ஆற்றிலிருந்தே வரவேண்டும். பலநாளாய் முற்றுகை நடந்துகொண்டிருப்பதால் கோட்டைக்குள்ளிருப்பவர்கள் வெளியே வர இடமில்லாமல் போய்விட்டது. ஆகையால் தாக வரட்சி வரவரக் கொடியதாய் விட்டது. இவ்வளவு கஷ்டத்திலும் அவர்கள் 'நம்மால் இனிச்சண்டைபோட முடியாது' என்று ஒருவார்த்தை சொல்லிவிட்டால் இங்கிலீஷ்காரர்கள் அவரது வீரத்தனத்தை மெச்சி, அவர்களுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்திருப்பார்கள். ஆயினும் அவ்வாறு செய்வது பெரிய அவமானம் என்று அவர் அடங்காவீரம் தூண்டியதுபோலும்!

ஆதலால் நவம்பர் மாதம் 30-ம் தேதியில் இரு கட்சியாரும் புங்கானு புங்கமாய்த் துப்பாக்கியால் சுட்டுக்கொண்டிருக்கும் சமயத்தில் திடீரெனச் சுடுவதை நிறுத்தி நேபாலியர்கள் தமது தலைவராகிய பலபத்திர சிங்கோடு கூட, கோட்டையின் வாயிற்கதவுகளைச் சட்டெனத் திறந்துபோட்டு, இங்கிலீஷ்காரர்கள் என்ன நடக்கிறது என்று உற்றுப்பார்ப்பதற்குள்ளாக, தமது துப்பாக்கி, கத்தி, கேடயம் முதலியவைகளோடு கூட, சற்றும் மனஞ்சலியாமலும், ஒருவரும் காயப்படாமலும் வெளிவந்து, வயிறாரத் தண்ணீரருந்திப் பிறகு ஒருவருக்கும் தெரியாமல் மறைந்து போய் விட்டார்கள்! என்னே இவர்கள் தைரியம்! என்னே இவர்களது இராணுவத் தன்மை!

இங்கிலீஷ்காரர்கள், கிரிமியா தேசத்தில் 1854-ம் வருஷத்தில் சண்டை செய்துகொண்டிருந்தபோது 'லைட்பிரிகெட்' (Light Brigade) என்ற 600 பேர் இராணுவ வீரர்கள் மஹா தைரியமாய்ச் சண்டை செய்த பலபராக்கிரமத்தைக் கொண்டாட அநேக பாடல்களும் ஏற்பட்டிருக்கின்றன. பிரான்ஸ் தேசத்திலுள்ள ஒற்றை வீரனை 'லாதூர்டவர்ன்' என்பவன் பெயர் அழியாப் புகழ் படைத்தது. நமது நேபாள தேசத்திலுள்ள பலபத்திர சிங்கும், அவன் ஆட்கள் முந்நூற்றுவறின் ஆற்றலும் வீரமும் புகழும் இவர்களதைப் பார்க்கிலும் மேன்மையுடைத்தெனச் சொல்வது தவறாமோ?

இன்னும் பலபத்திர சிங்கைப்போன்ற ஆண் சிங்கங்கள் நம் இந்தியருள் பலர்

ஆனையிருந்த அரசாண்ட இடத்திலே, பூனை இருந்து புலம்பி அழுகிறது.

இருக்கிறார்களென்றால், இந்தியர்களா இராணுவத்தன்மையில் குறைந்தவர்கள்? இந்தியர்களுக்கா வீரத்தன்மை இல்லை? இப்போது சுமார் நாற்பது, அல்லது ஐம்பது வருஷ காலமாய்ச் சண்டை செய்யாமலிருந்தும், சண்டையைப் பாராமலிருந்தும் நமது வீரர்கள் மெஸொபொடோமியா, பாலஸ்தீன், பிரான்ஸ் முதலிய தேசங்களில் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது தீரத்தைப் புகழ்ந்து நமது கவர்ன்மெண்டார் "விக்டோரியா கிராஸ்" முதலான ஒப்புயர்வற்ற பரிசுகளை யெல்லாம் அவர்களுக்கு அளித்திருக்கிறார்கள்.

ஆதலின் இந்தியாவிற்குக் கடமைப்பட்டோரெல்லாரும் இவ்விஷயத்தைச் செவ்வனே யறிந்து, தமது வாழ்க்கையைப் பிறர் பழிகூறாதபடி நடந்துகொள்வாராக என்பதே நமது பிரார்த்தனை.

---

# சென்னையின் வரலாறு

## THE STORY OF MADRAS

ஆதிகாலந் தொடங்கி இந்திய வியாபாரம் லாபகரமானது. இந்தியாவில் விளையும் நெல் மிளகு, சுக்கு, ஏலக்காய், ஜாதிக்காய் முதலான வாஸனைப் பண்டங்களும், முத்து, வைரம், சரிகை தினுசுகளும், இந்தியாவில் செய்யப்பட்ட பருத்தி, பட்டு வஸ்திரங்களும் உலகப் பிரசித்தி பெற்றவை. இப்பண்டங்கள் ஐரோப்பாவில் கிடைப்பதில்லை. எனவே, ஐரோப்பியர் இவைகளை யடைய அதிக ஆசைப்பட்டனர்.

மேற்சொல்லிய இந்தியச் சரக்குகள் தொன்று தொட்டு ஐரோப்பாவுக்கு வெனிஸ் நகரத்து வணிகர்களால் செங்கடல் மார்க்கமாக கொண்டுபோகப்பட்டு வெகு கிராக்கியாக விற்கப்பட்டன. வெனிஸ் வணிகர்கள் அதிக லாபமடைந்தார்கள். இதைப் பார்த்ததும், ஐரோப்பாவில் மேற்றிசை நாடுகளிலுள்ளவர்களுக்கு எப்படியாவது இந்தியாவோடு வியாபாரஞ் செய்யவேண்டுமென்ற எண்ண முண்டாயிற்று.

நாம் இப்போது 20-வது நூற்றாண்டில் வசிக்கிறோம். 16-வது நூற்றாண்டில் (அதாவது 400 வருஷங்களுக்கு முன்) ஐரோப்பாவில் மேற்கிலுள்ள போர்ச்சுகல் என்ற தேசம் முதன்முதலில் இந்தியாவுக்கு ஆப்ரிக்காவைச் சுற்றிக் கடல் மார்க்கமாக ஒரு வழி கண்டு பிடித்து, இந்தியாவோடு தான் மட்டும் வியாபாரம் செய்ய ஆரம்பித்தது.

போர்ச்சுகேசியர் 16-வது நூற்றாண்டு முழுமையும் இந்தியாவில் தாங்களே வியாபாரஞ் செய்து அதிக லாபத்தையும் செல்வாக்கையும் அடைந்தார்கள். ஆகவே, இவர்கள், வியாபாரம் செய்வதோ டிராமல் தேசத்தையும் ஆள யத்தனித்தார்கள்; இந்துக்களையும், மகமதியர்களையும் கிறுஸ்துவர்களாகும்படி கட்டாயப்படுத்திக் கொரோமாக நடத்தினார்கள். இவர்களுடைய கர்வத்தையும், கெட்ட நடவடிக்கைகளையும் சொல்ல முடியாது. இக்காரணங்களால் இவர்கள் அதிகாரம் 16-வது நூற்றாண்டினிறுதியில் சீர்குலைந்தது.

இவர்களுக்குப் பிறகு, ட[illegible]ர் வியாபாரம் பலம் அடைந்தது. 17-வது நூற்றாண்டு முழுமையும் இந்தியாவில் டச்சுக்காரர்களுக்கு வியாபாரத்தால் நல்ல லாபம். இதைப் பார்த்ததும் இங்கிலீஷ்காரர்களுக்கும் இந்தியாவோடு எப்படியாவது வியாபாரம் செய்யவேண்டுமென்ற எண்ண முண்டாயிற்று. 1599-ம் வருஷத்தில் லண்டன் நகரத்தில் ஒரு வியாபாரச் சங்கம் ஏற்படுத்தப்பட்டது. அக்காலத்தில் அரசுபுரிந்த எலிஜபத் மகாராணியிடம் இச்சங்கம் இந்தியாவோடு வியாபாரஞ் செய்ய உத்தரவு பெற்றது. இச்சங்கத்திற்கு ஈஸ்ட் இந்திய கம்பெனி என்றுபெயர். 1601-ம் வருஷத்தில் இக்கம்பெனியின் கப்பல்கள் முதல் முதல் கீழ்இந்தியத் தீவுகளுக்குப் பாய்விரித்தோடின. இத்தீவுகளோடு டச்சுக்காரர்கள் ஏற்கெனவே வியாபாரஞ் செய்துகொண் டிருந்தபடியால், இவர்களுக்கும் இங்கலீஷ்காரர்களுக்கும் அடிக்கடி சண்டைகள் உண்டாயின. ஒரு சமயத்தில் யாதொரு காரணமுமில்லாமல் பத்து இங்கிலீஷ்காரர்கள், டச்சுக்காரர்களால் கொல்லப்

பட்டார்கள். டச்சுக்காரர்கள் பலமாக விருந்தபடியால், இங்கிலிஷ்காரர்கள் இத்தீவுகளை விட்டுவிட்டு, இந்தியாவோடு மட்டும் வியாபாரஞ்செய்ய ஆரம்பித்தார்கள்.

இங்கிலீஷ்காரர்களுக்கு இந்தியாவில் சோழமண்டலக்கரையில் முதல் வியாபார ஸ்தலம் மசூலிபட்டணம். பிறகு இவர்களுக்கு நெல்லூர் ஜில்லாவிலுள்ள ஆர்மகான் கிடைத்தது நல்லதென்றே சொல்லவேண்டும். ஏனென்றால் மூன்று வருஷங்கள் கழித்து மசூலிப்பட்டணம் கவர்னர் இவர்களைத் தொந்திரவு செய்தபடியால் அதை விட்டு இவர்கள் ஆர்மகானுக்கு வரவேண்டியிருந்தது. ஆர்மகான் வியாபாரத்திற்கு தகுந்த இடமல்ல. ஆகையால் இங்கிருந்த வியாபாரிகளுக்கும், இங்கிலாந்திலுள்ள கம்பெனி டைரெக்டர்களுக்கும் சோழ மண்டலக்கரையில் வியாபாரத்திற்குத் தகுந்த இடம் ஒன்று எப்படியாவது சம்பாதிக்க வேண்டுமென்ற வெண்ணம் உண்டாயிற்று. போர்த்துகேசிய வியாபாரஸ்தலமாகிய ஸென்ட்தோமுக்கு(மயிலாப்பூருக்கு)ச்சமீபத்திலுள்ளபிரதேசம்வியாபாரத்திற்குத்தகுதியாவென்று பரீக்ஷித்துப் பார்க்க மசூலிபட்டணம் சங்கத்துக்கு அங்கத்தினராகிய பிரான்ஸிஸ் டே என்பவர் அனுப்பப்பட்டார். அலைகள் பலமாக அடித்தபோதிலும், ஸென்தோமுக்குத் தெற்கிலுள்ள விடம் வியாபாரத்திற்கு ஏற்றவிட மென்று கண்டு, இதை அக்காலத்துச் சந்திரகிரி இராஜாவாகிய ஸ்ரீரங்கராயரிடமிருந்து 1639-வருஷத்தில் வாங்கி, அதில் ஒரு கோட்டை கட்டவும் உத்தரவு பெற்றார். இந்த ஸ்தலம் கடற்கரை நெடுக ஐந்துமைல் நீளமும், கடற்கரையிலிருந்து உள்நாட்டில் ஒருமைல் அகலமு முடையது. இதுதான் "மெட்ராஸ்" என்று சொல்லப்பட்ட சென்னபட்டணம். இதில் டே என்பவரால் கட்டப்பட்ட கோட்டை இப்போதிருக்கும் ஸென்ட் ஜார்ஜு கோட்டையே. ஸென்ட் ஜார்ஜ் என்பது இங்கிலாந்து தேசத்தின் ரக்ஷக தேவதையின் பெயர்.

முதலில் கட்டிய கோட்டை மிகவும் சிறியது. இப்போதிருக்கும் கோட்டையில் பாதி கூடயில்லை. இதற்கு வெள்ளையர் பட்டணமென்று பெயர். கோட்டைக்கு வடக்கில் ஒரு அகலமான கடைத்தெரு வுண்டு. இத்தெருவுக்கு அப்பால் ஓர் இந்திய பட்டண முண்டாயிற்று. இதில் இந்துக்கள் குடியிருந்ததால் இதற்கு கறுப்பர் பட்டணமென்று பெயருண்டாயிற்று. இதற்கு வடக்கிலிருந்தது முத்தியாலுபேட்டை. இப்போது ஸௌகார்பேட்டை என்று வழங்கப்படும் பாகத்தில் தோட்டங்களும் சில பங்களாக்களுமுண்டு. அதற்கப்புறமுள்ளது பெத்து நாய்க்கன்பேட்டை. கறுப்பர் பட்டணத்திற்கு மேற்கில், ஓர் ஆறு ஓடிற்று. அது இப்போதில்லை. கோட்டைக்கு எதிர்ப்பக்கத்திலுள்ள தீவு இப்போதிருக்கிற மாதிரி அப்பவும் திறந்த வெளியாகவே யிருந்தது. பிரிடிஷ் அதிகாரத்திற்குத் தெற்கெல்லை திருவல்லிக்கேணி. எழும்பூர், புரசைபாக்கம், தண்டையார்பேட்டை பதினேழாவது நூற்றாண்டினிறுதியில் நவாப் அசட்கானால் கவர்னர் ஹிக்கின்ஸனுக்குக் கொடுக்கப்பட்டன.

நுங்கம்பாக்கமும் இன்னும் நான்கு கிராமங்களும் கவர்னர் பிட்டுக்கு 1708-௵த்தில் டாட்கானால் கொடுக்கப்பட்டன. வெப்பேரியும் பெரம்பூரும் 1742-௵த்தில் கிடைத்தன.

இதுவரையில் சென்னபட்டணம் எவ்விதமுண்டாயிற்று என்பதைச் சுருக்கிச் சொன்னோம். காலம் செல்லச் செல்ல ஜனநெருக்கத்தாலும், இங்கிலீஷ் பிரஞ்சுக்காரர்களுக் குண்டான சண்டைகளாலும் சென்னையில் அனேக மாறுதல்களுண்டாயின. அவற்றில் சிலவற்றைச் சொல்லுவோம். கோட்டை கட்டி நூறு வருஷங்களான பிறகு அதை அடுத்திருந்த இந்திய பட்டணம் அழிக்கப்பட்டது. அதிலுள்ள ஜனங்கள் முத்தியாலு பேட்டையிலும், பெத்து நாயக்கன் பேட்டையிலும் போய் குடியேறினார்கள். இப்பேட்டைகளும் கறுப்பர் பட்டணமென்று பெயரிடப்பட்டன. 1906-௵த்தில் நமது சக்ரவர்த்தியாராகிய ஐந்தாம் ஜார்ஜ் இளவரசாகச் சென்னையில் விஜயஞ்செய்தபோது, அவருடைய ஞாபகார்த்தமாக, கறுப்பர் பட்டணமென்பது ஜார்ஜ் டௌன் என்று பெயர் மாறியது.

பழைய பிரிடிஷ்மயானத்திலுள்ள கோரிகளிலும் கல்லறைகளிலும் சமாதிகளிலும் இங்கிலீஷ்காரர்கள் சத்துருக்களாகிய பிரெஞ்சுக்காரர்கள் ஒளிந்திருந்து சென்னையைத்தாக்கியதால், மயானமிருந்தவிடம் தெரியாமல் அதி

இடையன் கெடுத்தது பாதி, மடையன் கெடுத்தது பாதி.

னுள்ள கட்டடங்களை இங்கிலீஷ்காரர்கள் அடியோடு அழிக்க வேண்டியிருந்தது. தற்காலத்தில் வா காலேஜிக்கு அஸ்திவாரம்போட்டபொழுது, அந்தவிடந்தான் பழைய பிரிடிஷ் மயானமென்று கண்டுபிடிக்கப்பட்டது.

இதிலுள்ள கோரித் தலைப்புறக் கல்கள் கோட்டையிலுள்ள ஸெண்ட் மேரி மாதா கோவிலில் பத்திரப்படுத்தப்பட்டன. நாளைக்கும் அக்கோவிலில் அவைகளை நீங்கள் பார்க்கலாம். (இது அடுத்த சஞ்சிகையில் முடிவுபெறும்.)

---

# கல்விக் குறிப்புகள்
# Educational Notes

**குடித்தனச் செட்டு**

இங்கிலாந்தில், பாடசாலைகளில் படிக்கும் பெண்பிள்ளைகளுக்குக் குடித்தன விஷயமான பாடங்களையும் கற்பிக்கப்பட வேண்டியதற்கான ஏற்பாடுகள் நடந்துவருகின்றனவென்பதைக் கேட்க நமக்கு ஆனந்த முண்டாகின்றது. இதற்குப் பிரதம மந்திரியான ஸ்ரீமான் லாய்ட் ஜியார்ஜின் மனைவியே பிரதானமாக விருந்து காரியங்களைச் செய்தனராம். சமையல் வேலை, கடைக்குப்போய்ச் சாமான் வாங்குதல் முதலிய குடித்தனக்காரிக்கு இன்றியமையாதனவான வேலைகளை யெல்லாம் அப்பள்ளிக்கூடங்களில் கற்றுக் கொள்வதற்குச் சவுகரியங்கள் செய்து கொடுக்கப்படுமாம். அம்மாதிரி இந்தியாவிலும் ஏற்பட்டால் மிகுந்த நலமாக விருக்குமென்பதைச் சொல்ல வேண்டியதில்லை. அங்கு பெண்பிள்ளைகளுக்குச் சிற்சில இடங்களில் உபயோகமான தொழில்களைச் சொல்லிக் கொடுக்கின்றனர். என்றாலும், அத்தொழில்களை ஒழுங்குபடுத்தி, சீர்திருத்தி, பிற்காலத்தில் உபயோகப்படும்படி செய்வது நமது வித்யா இலாகா அதிகாரிகளும், வித்யா விஷயத்தில் சிரத்தை பாராட்டுபவர்களும் கவனிக்கவேண்டிய காரியமாம்.

* * *

**இங்கிலாந்தில் கல்விச் சட்டம்.**

இங்கிலாந்தில் கல்வி மந்திரியான ஸ்ரீமான் பிஷர் (Fisher) பார்லிமெண்டில் ஒரு மசோதா கொணர்ந்திருந்தாரென்று முன்பொரு சஞ்சிகையில் விஸ்தாரமாகச்சொன்னது ஞாபக மிருக்கலாம். இப்போது சட்டமாக இங்கிலாந்திலும் வேல்ஸிலும் செலாவணியாக அமுலுக்கு வந்துள்ளது. இந்தச் சட்டத்தின் முக்கிய அம்சங்களாவன :—

(1) ஐந்து வயதுக்கு மேலும், பதினான்கு வயதுக்கு உட்பட்டுமுள்ள பிள்ளைகள் கட்டாயமாகப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப்படவேண்டும். (2) பிரதேச அதிகாரிகள் சந்தர்ப்பானுசாரமாக, இந்தக் கட்டாய வயது வரையறையைப் பதினைந்தாக்கலாம். (3) 16 வயது வரைக்கும், சிற்சில வேளைகளில் 18 வயது வரைக்கும், சிறுவர்களுக்கு "தொடர்ச்சிப் பள்ளிக்கூடங்கள்" ஸ்தாபிக்கப்படவேண்டும். (4) இந்தத் தொடர்ச்சிப் பள்ளிக்கூடங்களில் வருஷமொன்றுக்குப் பிரதமத்தில் 280 மணி நேரமும், ஏழு வருஷங்களுக்கு மேல் 320 மணி நேரமும் பிள்ளைகள் படிக்க வரவேண்டும். (5) 12 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளை யாதொரு தொழிலிலும் அமர்த்தக்கூடாது. (6) 12 வயதுக்கு மேற்பட்டு 14 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளை யாதொரு ஞாயிற்றுக் கிழமையிலும் இரண்டு மணி நேரத்துக்கு அதிகமாக வேலையில் அமர்த்தக்கூடாது. (7) பிரதேச அதிகாரிகள் பிள்ளைகளின் தேகாரோக்கியத்துக்கும் சன்மார்க்கத்துக்கும் ஏற்ற சவுகரியங்களைச் செய்து கொடுக்கவேண்டும். (8) ஸகிண்டரிப் பள்ளிக்கூடங்களிலும் தொடர்ச்சிப் பள்ளிக்கூடங்களிலும் சிறுவர்களுக்கு இலவசமாக வைத்தியம் பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. (9) இரண்டு வயதுக்கு மேற்பட்டு ஐந்து வயதுக்குக் குறைந்த பிள்ளைகளுக்கு "நாற்றங்கால்" பள்ளிக்கூடங்களைப் பிரதேச அதிகாரிகள் ஸ்தாபிக்கலாம். (10) சரீர வளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்குப் பிரத்யேகமான பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்படுகின்றன. (11) பிரதமப் பள்ளிக்கூடங்களில் சம்பளம் வசூலிக்கவே கூடாது.

## வஸந்த மந்திரம்

(89-ம் பக்கத் தொடர்ச்சி)

### ஐந்தாம் அதிகாரம்

### சுல்தான் படும்பாடு

விடியற்கால மாயிற்று. குயில்கள் கூவுகின்றன. உன்னதமான மரங்களிலிருந்தும் பாறைகளிலிருந்தும் கருடன்களும் கழுகுகளும் வெளிப்புறப்படுமுன் ஒன்றையொன்று துணைக்கு அழைக்கின்றன. காக்கையும் சப்தம் செய்கின்றது. செடிகளில் குருவிகள் 'கீச்சு கீச்'சென்று கத்துகின்றன. மைனைக் குருவிகள் பேசுகின்றன. காற்றென்பதே சிறிதுமில்லை. வஸந்தமாகிய அக்காலத்தில் துளிர் விட்டு நிற்கும் மரங்களில் ஒரு இலையேனும் அசையவில்லை. பக்ஷிகள் சில சிலவாய் வெளிப்புறப்படுகின்றன. இன்னமும் ஏன் நன்றாய் வெளிச்சமாக வில்லை? கீழ்ப்புறம் மேகம் அடர்ந்திருக்கின்றது. இன்றுசூரியன் கண்ணுக்குத் தெரியமாட்டான்போல் இருக்கின்றதே! சுல்தான் ஆமத் செய்யப்போகிற காரியத்தை எப்படிப் பார்ப்பது என்று மறைந்து நிற்கின்றானே?

சுல்தானுடைய அரண்மனையில் இன்னும் ஒருவரும் தூங்கி விழிக்கவில்லை. சேவகர்கள் கண்ணை மூடிமூடித் திறந்துகொண்டும், கொட்டாவி விட்டுக்கொண்டும், படுக்கையில் புரண்டு கொண்டிருக்கின்றனர். பாக்ஷா மட்டும் தூங்கவில்லை. நிசி முதல் 'எப்பொழுது விடியும், எப்பொழுது விடியும்' என்று ஜன்னல் வழியாய்ப் பார்த்த வண்ணமாய் இருக்கிறான். கிழக்கு வெளுத்ததுமுதல், படுக்கையை விட்டெழுந்து கைகளைக் கட்டிக்கொண்டு, மேலும் கீழும் உலாவ ஆரம்பித்தான். சிறிது நேரம் உலாவிவிட்டு ஜன்னலில் தலையை நீட்டி வெளியே பார்ப்பான். மறுபடியும் உலாவுவான். நேரம் கழியவில்லையே என்று பெருமூச்சு விடுவான்; "என்நேரம் இத்தொலையாத இரவு" என்று ஆர்ப்பான்; மறுபடியும் உலாவுவான்; இவ்விளக்குக்குப் பயந்து சூரிய வெளிச்சம் உள்ளே வரவில்லையோ? இவ்விளக்கே என் தொந்தரவுக்குக் காரணம்" என்று விளக்கை நிந்தித்து அதை அணைப்பான். என்ன செய்துதான் என்ன? மனப்புழுக்கம் பொறுக்க முடியவில்லை. சேவகன் ஒருவனைக் கூப்பிடும்பொருட்டுக் கைகளை உரக்கத் தட்டினான். ஒரு சேவகனாவது வரவில்லை. மறுபடியும் தட்டினான்; அப்பொழுதும் ஒருவரும் வரவில்லை. பக்கத்தில் நாற்காலிமேல் நின்ற ஒரு சிறு மணியை எடுத்து வெகு பலமாய் அடிக்கத் தொடங்கினான். உடனே மாயவித்தை செய்ததுபோல் அரண்மனை முழுவதும் 'ஹம்' என்று சப்தமுண்டாயிற்று. சரசர வென்று படுக்கைகளைச் சுற்றினார்கள் சிலர். ஒருவன் மட்டும் படுவேகமாய் வீங்கக் கண்ணுடனும், ஊத்தைப் பல்லோடும், கோடுவழிந்த வாயோடும், அரசன் முன்வந்துநின்று தலை நிமிராமல் வணங்கினான். அரசன் "ஏடா! இவ்வளவு தூக்கம் அரண்மனையில் இன்று? நான் இரண்டு தரம் கூவியும் ஒருவரும் வராமலிருப்பது என்ன காரணம் பற்றி?" என அதட்டினான்.

சேவகன் மௌனமாக மனத்துள் "இன்றல்லவா இவர் இவ்வளவு சீக்கிரம் தூங்கி எழுந்தது! தனக்குத் தூக்கம் தெளிந்தால் எல்லாரும் அப்பொழுதே தூக்கம் தெளிய வேணுமா என்ன!" என்று எண்ணினான்.

அரசன் "ஏடா, பேச்சில்லை! நல்ல திருக்கட்டும்; பிள்ளாய், நீ இப்பொழுதே ஓடிப் போய் அரை நொடியில் அனந்தபட்டரை அழைத்துவா" என்றான். சேவகன் 'இம் மட்டில் விட்டாரே', என்றெண்ணி உடனே வெளியே புறப்பட்டான்.

"அனந்தபட்டர் சொல்வதைக் கேட்போம். அவர் மிகுந்த புத்திசாலி; மேலும் பல தேசங்களில் சஞ்சாரம் செய்தவர்; அவரைக் கேட்போம்" என்று திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டே மறுபடியும் அறையில் அரசன் மேலும் கீழும் உலாவிக்கொண் டிருந்தான்.

ஆகாயத்தில் மேகங்கள் சற்றே விலகின. சூரியனும் நன்றாய்ப் பிரகாசித்தான். நாழிகையும் ஐந்து ஆயிற்று. தன் அருகிலுள்ள கட்டிலில் உட்காருகிறான் சுல்தான் ஆமத்; மறுபடியும் எழுந்து உலாவுகிறான்; மறுபடியும் ஜன்னலில் எட்டிப்பார்க்கிறான். ஒரு நாழிகை கழித்துக் கதவு ஓசைப்பட்டது. திறந்து பார்த்தான் ஆமத் பாக்ஷா; நிற்கின்றார் வெளியே அனந்த பட்டர். வணக்கமாய் நின்ற அனந்த பட்டரை வாருமென்று உள்ளழைத்துக் கொண்டான் சுல்தான் ஆமத்.

ஆண்டியும் ஆண்டியும் கட்டிக்கொண்டால், சாம்பலும் சாம்பலும் ஒட்டிக்கொள்ளும்.

அனந்தபட்டர் நுழைந்த அறை பாக்ஷாவின் பள்ளியறை. 30 அடி நீளமும் 15 அடி அகலமும் இருக்கலாம். வடபுறத்துச் சுவரின் ஓரமாய் ஒரு கட்டில் அமைத்து இருந்தது. அதன்மேல் உட்கார்ந்தபடியே ஜன்னலின் வழியாய் வடக்கே இருந்த ஸுவர்ண ஸரஸைப் பார்க்கலாம். தென்புறத்து ஜன்னல்களின் வழியாய்த் தூரத்தில் உள்ள ஊர் தென்படும். இவ்வழியாய்த்தான் அரசன் இன்று காலையில் அடிக்கடி பார்த்துக்கொண் டிருந்தான். கட்டிலின் கீழ்ப்புறத்து ஓரமாய் எச்சில் துப்ப ஒரு வெள்ளிக் கிண்ணம் வைத் திருக்கின்றது. சுவர்களி லெல்லாம் நன்ருய்ச் சித்திரங்கள் வரையப்பட் டிருக்கின்றன. இடை இடையே பெயர் பெற்ற நிபுணர் சாயந்தீட்டி வரைந்து கொடுத்த படங்கள் மாட்டி யிருந்தன.

அறையினுட் சென்றதும், பாக்ஷா தன் கட்டிலின் மீது உட்கார்ந்துகொண்டு அனந்த பட்டருக்கு ஒரு ஆஸனம் காட்டினுன். அந்தப் பிராமணனும் ஆஸனத்தில் அமரவே, சுல்தான் "ஐயா! நீர் நேற்று இரவு நிலவு காய்வதற்கு நமது ஏரிமீது ஓடத்தில் வரவில்லையே என்று வருந்துகிறேன். அங்கே நிகழ்ந்த வற்றையாவது விசாரித்தீரா? இல்லை போலும்! இவ்வளவு சீக்கிரம் நீர் எவ்வாறு வெளியே போய் இருக்கக்கூடும்? நேற்று வெகு உல்லாசமாய் இருந்தது. தாதாவின் பாட்டும், விசித்ர வீரியரின்—ஹா! ஹா! என்ன வென்று சொல்வது!—இருக்கட்டும்! நீர் உதயபுரி—" என்று சொல்லிக்கொண்டே அப்பொழுது தான் ஞாபகம் வந்தவன்போல் நடித்து "உதயபுரியைப்பற்றிக் கேள்விப் பட்டதுண்டோ?" எனக் கேட்டான்.

அனந்தபட்டர் ஒன்றும் புலப்படாமல், உதயபுரியைப்பற்றி யென்ன விபத்து வந்தது என்று எண்ணி, "ஆம் கேள்விப்பட்ட துண்டு அரசே" என்ருர்.

"அரசரது பெயர்?"

"பிரதாபசிங்கர்."

"அவருக்கு லலிதை என்று ஒருமகள் உண்டோ?"

அனந்தபட்டர், சற்று ஆச்சரியத்துடன் "விசேஷ மென்ன? லலிதையைப் பற்றி ஏன் விசாரிக்கின்றீர்கள்?" என வினவினர்.

"அவளது ரூப லாவண்ணியங்களைப்பற்றி விசித்ரவீரியர் நேற்று இராத்திரி மிகவும் சிறப்பித்துச் சொன்னுரே! அது உண்மை தானே?" என உதடு துடிக்க வாய்பதறப் பாக்ஷா கேட்கும்போதே அனந்தபட்டர் "விசித்ரவீரியர் குடியைக் கெடுத்தாரே; நானும் முதலில் ஏமாந்து என்னவோ பதில் சொல்லிக்கொண்டு வந்துவிட்டேனே! இதில் ஏதோ விபரீதம் நடக்கப்போகிறது" என்று எண்ணியவராய்ப் பலமாகப் பாக்ஷாவுக்கு "அதில் சந்தேகப்படுவானேன்? எந்த இராஜ புத்திரிதான் அழகின்றி யிருப்பவள்; லலிதையை விசேஷமாகச் சிலாகிக்கவேண்டிய அவசியத்தைக் காணுமே" என்ருர்.

பாக்ஷா கோபத்துடன் "ஐயா! கேட்டதற்குப் பதில் சொல்லாமல் என்னவென்னவோ பேசுகிறீரே! எனக்கு அவையெல்லாம் ஒன்றும் தேவையில்லை. லலிதை விசித்ரவீரியர் சொன்னபடி அவ்வளவு அழகும் இளமையும் வாய்ந்தவளாயின், அவள் தப்பாமல் நமது அந்தப்புரத்துக்கு வரவேண்டியதுதான். வேறு பேச்சில்லை. நாம் லலிதா தேவியை நம் அருமை இராணியாகக் கொள்ள இஷ்டப்படுகிறோம் என்பதை நீர் போய் உதயபுரி யரசனுக்குத் தெரிவிப்பதுடன், இக்காரியம் கூடிய சீக்கிரம் நிறைவேறுவதற்குத் தக்க ஏற்பாடும் செய்து வருவீராக! நீர் இன்றே புறப்பட்டுப் போய்ப் பத்துத் தினங்களில் பதில் கொண்டுவரவேண்டும். இவ்விஷயத்தில் நீர் ஒன்றும் தட்டிப் பேசவேண்டிய அவசியமில்லை. நமது மந்திரிகளாகிய மகபத், சுமாலி இருவரையும் கூட இன்னும் தீர விசாரிக்கவில்லை. நீர் புறப்பட்டுப் போகலாம். வேண்டியபடி சேவகர்கள் பரிவாரங்கள் இவற்றை அழைத்துச் செல்லலாம். இப்பொழுதே அரண்மனை உத்தியோகஸ்தருக்கு உத்தரவு கொடுக்கின்றேன்" என்ருன்.

என்ன செய்வார் அனந்தபட்டர்? வாயெடுத்தார் பேசுவதற்கு; நாவெழவில்லை. சுல்தான் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார். பிடிவாதமும், கோபமும், காமமும், அதில் குடிகொண்டிருந்தன. சமயம் அறிந்தல்லவோ பேசவேண்டும்! "நானு சிக்கிக்கொண்டேன் இவ்வேலைக்கு!" என்று எண்ணி ஒன்றும் பேசாமல் வெளியே புறப்பட்டார். வெளியே வந்ததும் அப்படி

யே தூண்போல் நின்றுவிட்டார். "இது என்ன விசித்திரம்! நமது சிநேகிதரும் இப்படிப் பிசகு செய்வாரோ? இவ்வரசன் புத்திதான் ஏன் இப்படிக் கெட்டுப்போக வேண்டும்! பிரதாபசிங்கர் மஹா தருமசிந்தை யுடையவர்; வீராதிவீரர்; இப்பொழுது மூப் படைந்து விட்டார். ஆயினுமென்ன? சிரேஷ் டமான க்ஷத்திரிய குலத்தில் பிறந்தவர். தன் குமாரத்தியை அன்னிய ஜாதியில் மணம் செய்து கொடுப்பாரா? இவ்வரசனுக்கு அவரா இணங்கப்பட்டவர்? நானும் எனக்கிட்ட வேலையைச் செய்து தீரவேண்டியதுதானே! கொடுமை! கொடுமை!" என்று துக்கித்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டே தமது இல் லம் போய்ச்சேர்ந்தார்.

### ஆறாவது அதிகாரம்

### அந்தப்புர ஆ[illegible]

"ஆகவே, அனந்த[illegible] போகி றார்!—போய்விட்டாமே[illegible]படித் தானா! என்னடா, ந[illegible] ஒன்றும் சொல்லாமல் ஊமை[illegible]றாய், மல்லப் பா?"

"போவார் போலத்தான் இருக்கு அம் மா!—"

"இருக்கு! என்னடா இருக்கு? போயித் தான் போயிட்டாராமே; போயி லலிதா தேவி யைக் கைப்பிடியாய்ப் பிடித்துவந்து இங்கு அடைத்து விடவேண்டியது தானாமே; அப் படி உத்தரவாம். நீ என்னவோ தெரியாதவன் போல் மொணகறாயே—"

"போயிருக்கலாம் போலத்தான் இருக்கு துங்கோ; ஆனால் நம்புளுக்கு உத்தரவு ஒண் ணும்—"

"அடே, திருடா, நீ முதலில் போவார் போ லிருக்கு, என்கிறாய்; இப்பொழுது போயிருக்க லாம் போலத் தோணுகிறது என்கிறாய்.? ஏதடா, சுத்தப் பேச்சுமாறியாய் இருக்கிறாய்? உண்மை பேசமாட்டையா?"

"என்ன, அம்மா, எல்லாரும் இப்படியே கேக்கராங்களே; எனக்கு தெரிஞ்சால்லவா சொல்வேன்; என்னப் பாதகமாயிருக்குது!"

"நீ மறுபடியும் திருட்டுத்தனம் பண் றாய். நாளைக்குச் சோற்றுக்கு மண்ணைப் போடறேன்; வா! வா!! இத்தனை கொழுப்பா உனக்கு? நீதான் நடந்த சங்கதியெல்லாம் கதவுங்கீழே இருந்து கேட்டிருந்தையாமே!"

"ஐயையோ! ஆண்டவனே! இது என்ன மோசமாய் வந்துடிச்சே! நான்—" என மல்லப்பன் பேசி முடிவதற்குள் 'கணீர் கணீர்' என்று மணி சப்தம் கேட்கவே ஓரே ஓட்டமாய் ஓடிவிட்டான்.

மல்லப்பன் அந்தப்புரச் சேவகன். அவனு டன் பேசிய பெண்மணிக்கு வயது இருபத் தைந்துக்குள் இருக்கலாம். அழகு வாய்ந்தவள் என்றே சொல்லவேண்டும். விலையுயர்ந்த ஒரு சிவப்புப் பட்டாடை தரித்துக்கொண் டிருக் கிறாள். அச்சீலையின் ஒருதலைப்பால் தன் தலை யின் பின்பாகத்தைச் சற்றே மூடிக்கொண் டிருக்கிறாள். தலையின் முன்புறம் மட்டும் தெரிகின்றது. அவ்விடத்தில் சூரியனைப்போ லும் சந்திரனைப்போலும், செய்த இரண்டு மதிப்பில்லாக் கல்லிழைத்த ஆபரணம் அணி ந்துகொண் டிருக்கிறாள். முகம் சற்றே வாட்ட முற்றிருந்தது. மூக்கிலும் காதிலும் தொங் கும் வைர ஆபரணங்கள் அவளது அழகைக் கொஞ்சம் குறைத்து விட்டதென்னலாம். முகம், பாதம், இவை தவிர மற்றைய பாகங் களை நன்றாய் மூடிக்கொண்டிருக்கிறாள். பாதத் தில் மெல்லியதோர் பாதரக்ஷையும் அணிந் திருக்கிறாள். இவள் "அடே பாவிகாள்!" என்று சொல்லிச் சேவகன் சென்ற திசையை நோக்கிக் கையை நெரித்துக் கோபத்துடன் திரும்பினாள்.

இதுகாறும் இவள் நின்ற விடம் அந்தப் புரத்தின் முன்புறம். உள்ளே நுழையும் கத வுக்கு முன்னால் பலவர்ணங்கள் தீட்டியுள்ள ஒரு கனத்ததிரை தொங்கிக்கொண்டிருந்தது. அதே மாதிரி அவ்வந்தப்புரத்தில் ஒவ்வொரு மனைவாயிலிலும் திரைகள் தொங்கின. ஒவ் வொரு மனையும் தனிவீடு; ஒவ்வொரு வீட்டி லிருந்தும் தனித்தனியாய் இராஜமாளிகைக் குப் போக வழியுண்டு. இப்பெண்மணி ஓர் மனையுள் நுழைகின்றாள். நாமும் கூடச் செல்வோம். வேறு ஒருவரும் போகக்கூடா விட்டாலும் நாம் போவதற்கு என்ன தடை? காற்று, ஈ, எறும்பு, இவற்றைத் தடை செய்தா லொழிய நம்மைத் தடை செய்ய முடியாது!

உள் கூடத்தில் ஒரு தூங்கு மஞ்சத்தில் பஞ்சணை மெத்தையில் சாய்ந்து மெதுவாய்

ஆண் பிள்ளைகள் ஆயிரம் ஒத்திருந்தாலும், அக்காள் தங்கச்சி ஒத்திரார்கள்.

ஆடிக்கொண்டிருக்கிறாள் ஒரு தேவி : அவளிடம் நமது சினேகிதை போய் உட்கார்ந்தாள். உட்கார்ந்து கோபாவேசத்தோடு கண்களில் நீர் ததும்ப "பானுமதி! கேட்டாயா நீ இக்கொடுமையை! மனம் பதைக்கின்றது; நாம் போதாதென்று, உதயபுரியரசன் மகள் லலிதா தேவியையும் நம்மைப்போல் இந்நகரத்துக்குக் கொண்டுவரப் போகிறார்களாம்! நேற்று யாரோ அனந்தபட்டராம்! அவரை அனுப்பியாயிற்றாம்; இந்த அயல் ஜாதியாருக்குப் பயந்து நமது ராஜபுத்ர சகோதரர்களும் பெற்றோர்களும் என்ன அநியாயங்கள் எல்லாம் செய்கிறார்கள்! நம்முடைய வழக்கம் சுயம் வரம் அன்றோ! அதுதான் இல்லாவிட்டாலும் நமக்கு வெறுப்பில்லாத இடத்திலாவது மணம் செய்து கொடுக்கக் கூடாதா? இராஜ புத்திரர் இப்படி மானமழிந்து, வீர மிழந்து, போவாரோ! இந்த அந்தப்புரத்தில் மட்டும் மூன்று இராஜ குமாரிகள் இருக்கிறோமே! லலிதாதேவியோடு நான்குபேர் ஆய்விடுமல்லவா?" என்றாள்.

"என்ன செய்வது இந்திரே? நீ வருந்துவதில் பயனில்லை. நீ சிறியவள்; ஆலோசியாது பேசுகிறாய். தங்கள் குடிகளின் க்ஷேமத்தைக் கருதியும், கொடும் பாவிகளான கூலிப்படைக்குப் பயந்தும், நமது பெற்றோர்களும் சகோதரர்களும் இவ்வாறு செய்கின்றார்களே யன்றி வேறில்லை. வேண்டுமென்றே செய்வார்களா? தாங்கள் ஜயித்துத் தம் பலத்தை நிலை நாட்டிக் கொள்ளக் கூடுமானால் உன்னையும் என்னையும் இப்படி அவதிப்பட விடுவார்களா? கல் நெஞ்சர் என்று எண்ணினாயோ அவர்களை?"

"ஏன் பானுமதி இப்படி வேதாந்தம் பேசுகிறாய்? குடிகளின் க்ஷேமத்தைக் கருதினவர்கள் நம்மை இஷ்டமில்லாத இடத்தில் அடைக்கவேண்டுமா? நமது சௌக்கியத்தையும் சந்தோஷத்தையும் கருதவேண்டிய தவசியம் இல்லையோ? இப்பொழுது இங்கிருக்கும் இராஜ புத்திரிகளின் தகப்பன்மார்களும் சகோதரர்களும் ஒன்றுசேரின், தம் தேசத்தையும் குடிகளையும் காப்பாற்றிக் கொள்ள முடியாதா? எதிர்க்கும் எதிரிகளை ஒருங்கு சேர்ந்து சின்னபின்னப்படுத்தலாமே! அப்படித்தான் தோற்று விட்டார்கள் என்று வைத்துக்கொள்வோம். இராஜபுத்திரர் ஏன் போர்க்களத்தில் மாளக்கூடாது? இராஜஸ்திரிகள் நம் முன்னோர் வழக்கப்படி தீயில் குதித்து, ஏன் சிவபதம் சேரக்கூடாது? இது என்ன மானம் கெட்ட பிழைப்பு!"

"இந்திரே, நீ மிகவும் மனம் நொந்து பேசுகிறாய்; விஷயத்தை ஆழ்ந்து ஆலோசனை செய்வதில்லை. நான் சொல்வது சரியான மார்க்கமென்று கோபத்தால் உனக்குத் தோற்றவில்லை. நீ சொல்வது எல்லாம் சரியே: உன் யோசனைப்படி செய்யின் எவ்வளவு உயிர்கள் சேதமாகும்? அப்படி நாசமடைவதைவிட நாம் ஒருவர் இங்கே கஷ்டப்படலாகாதா? நான் இவ்விடம் இருப்பதால் பகவந்தபுரமே முழுவதும் இக்கொடிய சேனையால் கொள்ளையடிக்கப் படாமல் சௌக்கியமாய் இருக்கின்றதே! இதைவிட ஜீவகாருண்யமான [illegible]ன்ன செய்யப்போகிறேன் [illegible]த நான் என்னுடைய கஷ்டத[illegible]கிறதில்லை. நமது தலைவிதி இவ்[illegible]ணில் வருந்துவதில் பயன் என்ன?" எ[illegible]று [illegible]னுமதி அவளைத் தேற்றினாள்.

"நேற்று மஹேச்வரி சொன்ன வார்த்தைகள் ஞாபகம் இருக்கின்றனவா? பத்மினி மஹாராணி அக்கினி பிரவேசம் செய்யும் போது, காளிகாதேவியே அவள் மூலமாய்ப் பேசவில்லையா? அப்பொழுது பத்மினி 'இன்னும் சிலநாளில் இக்கொடிய மகமதியர் வலியிழந்து அரசிழந்து விடுவார்கள்; அப்பொழுது மேற்கே வருணதிக்கிலிருந்து வருணன் உதவியால் கடலெல்லாம் தமது ஆக்கினைக்கு உட்கொள்ளும் வேறு ஜாதியர் நமது தேசத்துக்கு வருவார்; மகமதியரை வென்று நாடாள்வார். அவர் காலத்தில் நமது நாடு மறுபடியும் செழித்தோங்கும். ஜனங்கள் திருப்தியுடன் இருப்பார்கள். நம் பெண்டிர் கற்புக்குத் தடையில்லாமையால் நாடு செழிக்கும். பெண் கல்வி மேம்படும். நமது பழைய நாகரீகத்தையும், கொள்கைகளையும், தத்துவங்களையும், உலகமே புகழும். தருமம் சிறக்க, மழைவளமும் கோவளமும் குன்றாது, நமது ஆசார முறைமைகள் சீர்பெற்று இடையூறின்றி நிலைபெறும்; அக்காலத்தில் அவர்களின் உதவியால் நம் நாடும் உலகத்துப் பல

தேசங்களுள் முக்கியமானதொரு தேசமென எண்ணப்படும்; எக்காலத்தும் காணு விசித்திர அநுபவங்கள் எல்லாம் அக்காலத்தில் தோன்றும்; வருணன் கருணையால் வரும் இக்குளிர்ந்த மனிதர்களுடைய உதவியால் நம்நாடு மேம்படும் மேம்படும்!' என்று சொன்னுளாமே. அக்காலத்தில் பிறக்கக்கூடாதா பாவிகளான நாம்!" என்று இந்திராதேவி வருந்தினுள்.

"உண்மைதான்; அக்காலத்தில் நமது பெண்டிர் யாதொரு தொந்திரவுமின்றிச் சுகமாய் இல்லறம் நடத்தும்படி கடவுள் அருள் புரியட்டும். யார் கஷ்டப்பட விதியிருக்கின்றதோ அவர்கள் கஷ்டப்பட வேண்டியதே; லலிதாவுக்கு இக்கிரஹவாஸம்ஏற்படவேண்டுமானுல் ஏற்பட்டே தீரும்; நீயும் நானும் வருந்துவதால் நிற்காது. நீ சொல்லும் அந்த நல்ல காலத்தில் நாமெல்லாம் மறுபிறப்புப் பிறப்போம். சந்தேகமில்லை.இப்பொழுது நாம்படும் கஷ்டமெல்லாம் கதையாக விளங்கும்! உன் மனம் தளர்ந்திருக்கின்றது. உன் கோபம் ஆறவில்லை; நந்தவனத்தில் சற்றுப் போய் உலாவுவோம் வா; அங்கே குளிர்ந்த காற்றுப்பட, உன் முகம் சற்றே மலரும்; போவோம் வா" என்று இந்திரையைக் கைப்பிடித்து அழைத்துப் பாநுமதி சென்றுள்.

---

# நமது சிறு கதை

## OUR SHORT STORY

### நன்னெறி. III.

காலைநேரம். இரவு பெய்துகொண் டிருந்த பனி, இன்னும் சுத்தமாக நிற்கவில்லை. பனித்துளிகள் புல்லுகளின் நுனியிலும், இலைகளின் நுனியிலும், முத்துப்போல் ப்ரகாசித்துக்கொண்டு, சூர்ய ரச்மி படும்பொழுது நாளுவித வர்ணங்க ளமைந்த ரஸகுண்டுகளைப் போல் சோபித்தன. அப்பொழுதுதான் அலர்ந்த புஷ்பங்களின் காட்சி அதிமனோஹரமாயிருந்தது. காற்றுக் குளிர்ந்து வீசி, மனிதனுக்கு ஊக்கத்தை யளிக்கத்தக்கதா யிருந்தது.

ஸுமார் இரண்டு மைல் வந்திருப்பான் நமது கதாநாயகன். விருக்ஷங்க ளடர்ந்தப்ரதேசமெல்லாந் தாண்டி, இருபுறமும் பயிரிடப்பட்டவயல்களேயுள்ள வெளி ப்ரதேசத்தை யடைந்தான். போகும்போதே, தீர்க்கமான யோசனையிலாழ்ந் திருந்தது அவன் மனம். "ப்ராயச்சித்தமாவது செய்வதாவது, தீமையை யகற்றுவதாவது! தீமையை யகற்றுவதென்றுல், தீயவர்களைச் சிறையிலிட்டோ, அல்லது கொன்றே தண்டித்தாலொழிய, தீமை யெங்ஙனம் ஒழியும்? ஆனுல், அவ்வாறு செய்தாலோ, மேலுந்தீமையே விளைகிறது என்பதற்கு, கரிவீரன், திருடன் இவர்கள் விஷயம் ஸாக்ஷி. பின் எவ்விதந்தான் தீமையை யொழித்து ப்ராயச்சித்தஞ் செய்துமுடிக்கிறேம்" என்று ஆலோசித்துக்கொண்டு, தன்னையே மறந்து செல்பவன் காதில் "பிடி, பிடி, விடாதே, இதுதான் ஸமயம். அடாடா, இப்படித் துரத்து, இப்படி, அட சனியனே" என்று பெருமிரைச்சலொன்று காதில் விழுந்தது. உடனே தலையை யசைத்து, புத்தியை ஸ்வாதீனப்படுத்திக்கொண்டு, இவ்வளவு கூச்சலும் எதற்கென் று நிதானித்தான். அங்கே, ஒரு கழனியில் தான்யம் நன்றுய் முற்றி, அறுப்புக்குத் தயாராய்க் கதிர்கள் சாய்ந்திருப்பதைக் கண்டான். அக்கதிர்களினிடையே ஒரு சிறு பசுங்கன்று துள்ளியோடிக்கொண் டிருப்பதையும், அதைப் பிடிப்பதற்கு ஆறு அல்லது ஏழு மனிதர்கள் ப்ரயத்னப்படுவதையுங் கவனித்தான். அநேக திக்குகளிலிருந்தும் அநேகர் கைகளைத் தட்டியும் பெருங்கூச்சலிட்டும், யேககாலத்தில் அதை விரட்டுவதால், அக்கன்று திக்ப்ரமை யடைந்து, பயத்தால், இங்குமங்கும் ஓடி, தான்யத்தை மிதித்து வீணுக்குவதை யறிந்து பரிதபித்தான். கன்று ஒருபக்கம் ஓடி அநேகமாக வெளியில் வந்துவிடும் ஸந்தர்ப்பமாயிருக்கும். அப்பக்கம் நிற்கும் யாராவது ஒருவன் அதைப் பிடிக்க யத்தனிப்பான். அது பயந்து மறுபடியும் கழனிக்குள்ளேயே சென்றுவிடும். இவர்கள் ஸ்திதி யிப்படியிருக்க, ரஸ்தாவோரத்தில் நின் றிருக்கும் ஒரு கிழவி "அதன்காலையொடித்து விடுவார்கள் போலிருக்கிறதே, இக்கட்டையில் போவார்கள்!" என்று ஆசீர்வாதஞ் செய்துகொண்டிருந்தாள்.

அவர்கள் மௌட்டியத்திற்கு இரக்கப்பட்டு, "ஏய், எதற்கப்பா இவ்வளவு அநர்த்தம் விளைக்கிறீர்கள். அக்கன்றை விட்டுவிட்டு வெளியே வாருங்கள்" என்றான் நமது சிறுவன். எல்லோரும் அவ்விதமே செய்ய, "பாட்டி, உன் பசுங்கன்றைக் கூப்பிடு" என்றான் அச்சிறுவன். "லக்ஷ்மி, அம்மா, வாடியம்மா, வா" என்றழைத்த குரலைக் கேட்டவுடன் காதுகளை உயர நிமிர்த்திக்கொண்டும், வாலை முறுக்கிக்கொண்டும், ஒரு பாய்ச்சலாக வந்து நின்றுவிட்டது கன்று கிழவியினருகில்.

குடியானவர்களின் அமிதமான வந்தனங்களைப் பெற்றுக்கொண்டு, அவன் தன்வழியே மறுபடியுஞ்செல்ல வாரம்பித்தான். அப்போது அவன் மனம் மறுபடியும் யோசனையிலழுந்தியது. "இதனால் என்ன அறிந்தேன். தீமையினால் தீமையை யோட்ட முடியாது. தீமையை யெவ்வளவிற் கெவ்வளவு பலாத்காரமாக ஒழிக்க முயலுகிறார்களோ, அவ்வளவிற் கவ்வளவு அது வேரூன்றி விடுகிறது. பக்ஷமாகக் கிழவி, கூப்பிட்டவுடன் ஓடிவிட்டதல்லவா அக்கன்று. ஆனால் அவள் கூப்பிட்டதும் போகாதிருந்தால், அப்பொழுதென்ன வாகும்? இதென்னவோ நமக்கு விளங்கவில்லை. எதற்கும் இன்னும் மூன்று நாட் பிரயாணந்தானே" என்று வித்தாந்தப்படுத்தியதற்கும், ஒரு கிராமத்தை யடைந்ததற்கும் ஸரியாயிருந்தது. அங்கு தங்கி, வெயில்தாழப் போகலாமென் றெண்ணி ஒரு வீட்டில் அநுமதிகேட்டு, அவன் சற்றுத்தங்கினான். அவ்வீட்டில் ஒருவன், கண்ணாடியொன்றைத் துடைப்பதைக் கருத்தாய்ப் பார்த்தான். கரிநிறைந்த அந்தத் துணியால் கண்ணாடியைத் துடைக்கும் போதெல்லாம், ஒரு புறமிருக்கும் அழுக்குக் கொஞ்சம்போகும், மற்றொருபுறம் 'பட்டையாக' கரிக்கோடுகள் விழும். இப்படி பல முறை அவன் செய்துகொண்டிருந்தான்.

"என்னப்பா செய்கிறாய்?"

"ஏன், தெரியவில்லையோ? இந்தப் பாழுங் கண்ணாடியைச் சுத்தமாகத் துடைக்கப் பார்க்கிறேன். கைவலிக்கிறதேயொழிய, அது சுத்தமான பாட்டைக் காணோம்."

"உன்னிடம் வேறு துணி யிருக்கிறதா?".

"இல்லையே."

"ஆனால், இந்தத் துணியைத்தான், கரிபோக நன்றாகக் கசக்கி யுலர்த்திக்கொண்டு வா" என்றதும், அப்படியே செய்து வந்தனன் வீட்டுக்காரன்.

"இப்பொழுது துடைத்துப் பார்."

"ஆமய்யா, இப்போது சுத்தமாக விருக்கிறதய்யா. இந்த யுக்தி எனக்குத் தோன்றவில்லையே."

'ஸரி' யென்று அங்கிருந்து புறப்பட்டு, நடந்து நடந்து காலையில் மற்றொரு கிராமத்தை யடைந்தான். அங்கே யொருவீட்டில், தகப்பனும் பிள்ளையுமாக உட்கார்ந்து, கையில் ஒரு இழைப்புளியைக்கொண்டு முன்னாலிருக்கும் ஒரு சிறு ஆஸநப்பலகையை இழைக்க முயன்றுகொண் டிருந்தார்கள். ஆனால், அப்பலகை கெட்டியாகப் பிடிக்கப் படாததால், இழைப்புளியை வைத்து நகர்த்தும்போது, பலகையும் நகர்ந்து விடும். இப்படிப் பன்முறையும் பலகை நகர்ந்துபோகவே, என்ன செய்வது என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தார்கள்.

"ஏனய்யா, என்ன செய்யவேண்டும்? ஏன் விழிக்கிறீர்கள்?"

"ஐயா, இந்தப் பலகையை யிழைக்கப் பாடுபடுகிறோம். இப்பாழும் பலகை இழைக்க வரமாட்டே னென்கிறது."

"இங்கே கொண்டுவாரும் அந்த ஆயுதத்தை."

"இதோ" என அதை வாங்கிப் பலகையைக் காலால் கெட்டியாக அழுக்கி இழைக்கவே, ஐந்து நிமிஷத்தில் பலகை 'வழவழ' வென்றாய் விட்டது. அவர்களுக்குண்டான ஸந்தோஷத்திற் கெல்லையில்லை. மிகுந்த கட்டாயத்தின் மேல், அங்கேயே பகல் போஜனஞ்செய்துவிட்டு ஸாயங்காலம் அடுத்த க்ராமத்தை யடைந்து ஒரு வீட்டில் தங்கினான்.

அவ்வீட்டுக்காரன் தாரமிழந்தவன். எனவே அவன் தன் கையால் சமையல் செய்து சாப்பிடும்படி நேர்ந்துவிட்டது. இரவு சமையலுக்கு அடுப்பு மூட்டவாரம்பித்தான். சிராய்த் தூள்களை நிறைய அடுப்பிலிட்டு நெருப்பு மூட்டினான். மந்தமாக எரிய வாரம்பித்தவுடன் பக்கத்திலிருந்து நான்கு விறகுகட்டைகளை மேலிட்டான். அக்கட்டைகள் ஈரமுலராதவை யாதலால், அடுப்பில் வைத்ததும், 'சிரா'யிலிருந்த ஜ்வாலையு மணைந்தது. மறுபடியும் ஒருதீக்குச்சி கிழித்தான்; மறுபடியும் விறகுகட்டைகளை, மே

விட்டதும், ஜ்வாலை யடங்கிவிட்டது. இப்படியே தீப்பெட்டி பாதிக்கு மேலாய் விட்டதே யொழிய நெருப்புப் பிடித்து அடுப்பெரிந்து சமையலாகும் வழியைக் காணோம். நெருப்பவிந்தவுடனுண்டாகும் புகை கண்களிலிருந்தும், மூக்கிலிருந்தும் ஜலம் தாரையாய்க் கொட்டும்படி மேலும் செய்துவிட்டது.

"சீ, சனியனே, என்ன இழவைப் பண்ணித் தொலைக்கிறது? நல்லத்துக்கா அவள் செத்தாள். நலமோ, பொல்லாங்கோ, பசித்தவேளையில் இவ்வளவு பொங்கிப்போட்டு வந்தாளே. அவளைக் கொண்டுபோய் என்னைச் சோதிக்கணுமா இந்தப்பாழும் தெய்வம். க்ரு ஹசாரம்" என்று மறுபடியுமாரம்பித்தான். நம் கதாநாயகனும் பரிதாப மேலீட்டால், உள் நுழைந்து 'அப்பா' கொஞ்சம் விலகியிரு. நான் அடுப்பு மூட்டித் தருகிறேன்" என்று சிராயில் நன்றாகத் தீப்பிடிக்கும் வரை காத்திருந்து, பிறகு ஒவ்வொன்றாய், விறகை வைக்கவும், 'சடசட' வென்ற சப்தத்தோடு மெள்ளப் பற்றிக்கொண்டு, சில நிமிஷத்திற்கெல்லாம் அடுப்புச் சிரிக்கவுந் தலைப்பட்டுவிட்டது. அன்று அவ்வீட்டுக்காரனுடைய விருந்தாளியாக விருந்து, காலையில் நடந்த இளைப்பாறிவிட்டு, ஸாயந்த்ரம் ஒரு மாந்தோப்பண்டை வந்து சேர்ந்தான்.

தான் புறப்பட்டு நான்காவது நாள் ஸாயங்காலமாதலால், தன்னுத்தேச்யமான மாந்தோப்பு இதுவாகத்தான் இருக்கவேண்டும் என்று ஸித்தாந்தப்படுத்திக்கொண்டு, பர்ன சாலையிருக்குமிடந் தேடிச்சென்றான். அதைக் கண்டுபிடிக்க வெகு நாழிகையாகவில்லை. பதினைந்து நிமிஷத்தில் தோப்பு நடுவில் ஒரு சிறு பர்னசாலையிருந்தது. ஆனால் மறப்பட்டைகளாலான ஒருவிதக் கதவால் மூடப்பட்டிருந்ததால், அதனருகிற்சென்று மெள்ளக் கதவைத் தட்டினான்.

"யாரங்கே?" என்றொரு சப்தம் புறப்பட்டது.

"உங்களுடைய ஒத்தாசையைக் கோரியவோர் தீனன், ஸ்வயமாகப் பாபத்தைச் செய்த துஷ்டன். பிறன் செய்த பாபத்தையும் தன் தலைமேற்கொண்டவோர் ஏழை. பாபங்களின் ப்ராயச்சித்த மார்க்கத்தை யறிந்து கொள்ள வந்தவன்" என்று விஸ்தாரமான பதிலளித்தான். உடனே கதவு திறக்கப்பட்டது.

உள்ளே நுழைந்ததும், ஸந்யாஸியின் தோற்றத்தைக்கவனித்தான். வயது ஸுமார் தொண்ணூறு இருக்கலாம். தேகமெங்கும் சுருக்கங் கண்டு, "பழுத்தபழ' மாயிருந்தார். பல்லென்பதே மருந்துக்குங் கிடையாது. கூனிக் குறுகியிருந்ததால் இயற்கையுயரத்தில் பாதியுயரமேயிருப்பதாகப் பார்ப்பவருக்குத் தோன்றும். ஆனால் அவரது பருத்து முற்றிய தலையும், அகன்று பின்னோடிய நெற்றியும், நீண்டு வளைந்த நாசியும், இவ்வளவு வார்த்தக்யத்திலும் ப்ரகாசஞ் சிறிது காட்டுங்கண்களும், அவரது அபாரமான புத்தி வைபவத்தைப் பறையறைவித்தன. உலகரகஸ்யத்தைக் கண்டறிந்தவர்போல், முகத்தில் சாந்தமும், பரிதாபமும், கருணையுமே தவழ்ந்தன. விசேஷமாக நடக்க சக்தியில்லாவிடினும், அப்பர்ன சாலையில் உலாவிவர வேண்டியதற்குப் போதுமான பலமிருந்தது. கையில் ஒரு ஊன்றுகோல் இருந்ததை நாம் சொல்லவேண்டியது அனுவச்யம்.

இவை யனைத்தையும் ஒருக்ஷணத்தில் கவனித்துக்கொண்டு, அவர் பாதத்தில் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து அவரால் ஆசீர்வதிக்கப் பெற்றான்.

"ஏனப்பா, நீ யார்? என்ன பாபத்திற்கு ப்ராயச்சித்தந் தேட இங்குவந்தாய்? பிறன் பாபத்தையும் நீ ஏற்றுக்கொள்ள எப்படி நேர்ந்தது?" என்று ஆணியடித்ததுபோல் மூன்று கேள்விகளைக் கேட்டார்.

உடனே தன் கதையை ஜநநகால முதல் ஆரம்பித்து, ஒன்றும் விடாமல் சொல்லி "இவைகளினின்றும், தீமையைத் தீமையால் பலாத்கரித்து அகற்ற முடியாதென்று மட்டும் அறிந்தேனே தவிர, எங்ஙனம் செய்வது என்பதை யின்னமறிந்தேனில்லை. அதை மட்டும் அநுக்ரஹிக்கவேண்டும்" என்று முடித்தான்.

ஒரு நிமிஷம் யோசனையி லாழ்ந்தார் வ்ருத்தர். பிறகு அப்பர்னசாலையின் வடமேற்கு மூலையாகக் கையைக் காட்டி "அங்கே ஒரு கைக்கோடரி யிருக்கும் பார். அதை யெடுத்து என் பின் வா' என்றார். அப்படியே, பழையதும், ஜாஸ்தி கூர்மையில்லாததுமான வோர் கோடரியை யெடுத்துக்கொண்டு பர்னசாலை

ஆமுடையான் பலம் இருந்தால், குப்பை ஏறிச் சண்டை செய்யலாம்.

யைவிட்டு வெளியில் ஸந்யாஸியுடன் வந்து சேர்ந்தான். ஒரு மாதுளைமரத்தண்டை வந்து நின்றார் கிழவர். "இதோ, இந்தக் கிளையை வெட்டு" என்றார். வெட்டியாயிற்று. "அதை மூன்று பாகஞ்செய்" என்றார். அப்படியே செய்தான். "உள்ளேபோய் அடுப்பிலிருந்து ஒரு கொள்ளிக்கட்டை யெடுத்துவா" என்றார். அதுவும் வந்து சேர்ந்தது. "நெருப்பு மூட்டு" என்றார். ஆயிற்று. "இம்மூன்று துண்டுக்கட்டையையும், ஈரஞ் சுண்டும்படி எரி" என்னலும், அவை யப்படியே எரிக்கப்பட்டன. "மண்ணைத் தோண்டி அவைகளை நடு." நட்டான். "அதோ தெரிகிறதே அந்த நதியிலிருந்து உன் வாயில் ஜலங்கொண்டுவந்து இவைகளுக்கு ஊற்றி வளர். முதலாவது கட்டைக்கு, கண்ணாடி துடைப்பதற்கு நீ சொன்ன புத்தியை யுபயோகித்து ஜலமிட்டு வளர். இரண்டாங் கட்டைக்கு, தகப்பன் பிள்ளைக்குப் புத்திசொன்னதுபோல் வளர்ப்பாயாக. மூன்றாவது கட்டைக்கோ வென்றால் தாரமிழந்தவனுக்குச் சொன்ன புத்திமதியைப் போல் ஜலமிட்டு ரக்ஷி. இவ்வண்ணம் பயிரிட்டு, இம்மரக் கட்டைகள் துளிர்த்து, எக்காலத்தில் மாதுளைச் செடிகள் மூன்றும் முளைக்கின்றனவோ, அன்றுதெரியும், தீமையை யகற்றுவதெப்படி யென்று. உன் ப்ராயச்சித்தமும் அன்றோடு முடிவுறும்" என்று சொல்லிவிட்டுப் பர்னசாலைக்குட் போய்விட்டார்.

தன்னாலியன்றவரை யோசித்துப் பார்த்தான் கிழவர் சொன்னதின் அர்த்தம் என்னவாயிருக்கலாமென்று. அவனுக்கு ஒன்றுமே புலப்படவில்லை. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோ லிருந்தது. "ஸரி, என்ன தாத்பர்யமானாலென்ன, சொன்னபடி செய்வதே நமது கடமை" என்று தீர்மானித்து அவ்வாற்றுக்குச் சென்று தன் வாயாலேயே ஜலம் எடுத்து வந்து மரக்கட்டைகளுக்கு ஊற்றினான். வாயில் எவ்வளவு ஜலங் கொண்டுவரமுடியும்? மூன்று கட்டைகளுக்கும் போதுமான வளவு ஜலங் கொண்டுவர, பாதிராத்திரிக்கு மேலாயிற்று. நிரம்பவும் ச்ரமமாயிருந்தது. மேலும், அவன் மத்யானந்தான் போஜனஞ்செய்தவன். ஆகப் பசியாயுமிருக்கவே, பர்னசாலைக்குப் போய்க் கிழவரைக்கேட்டு உண்பதற்கு ஏதாவது பெறலாம் என்ற யோசனையோடு உள்ளே நுழைந்தான். கீழேயிருந்த வொரு மான் தோல் விரிப்பில் படுத்திருந்தார் கிழவர். கிட்டப்போய் எழுப்புவதற்கு உத்தேசமாய் அவரைப் பன்முறை கூப்பிட்டான். சலனமேயில்லை. மனந்திடுக்கிட்டது. கையைப்பிடித்து நாடிகளைப் பரீக்ஷித்தான். நாசியருகிலும் மார்பிலும் காதுகளை வைத்துக் கவனித்தான். ஒன்றிலுமே உபயோகமில்லையென்று கண்டுகொண்டான். கிழ ஸந்யாஸி பரலோகமடைந்து விட்டார்.

உடனே தனக்கிருந்த பசியை யெல்லாங் கூட மறந்து, அச்சந்யாஸியை யடக்கஞ்செய்ய வேண்டிய ஏற்பாடுகளைப்பற்றி யோசித்தான். ஆச்ரமம் வாங்கினவர்களின் ப்ரேதத்தை, தகனஞ்செய்வது வழக்கமில்லையல்லவா ஹிந்துக்களுள்? ஆகவே, அவரைப் புதைக்கவோர் குழிதோண்ட வாரம்பித்தான் மறுநாட் காலை. அப்பர்னசாலையில் மீந்திருந்த சில தின்பண்டங்களை யருந்தி, படுத்துறங்கிய நேரம்போக, பாக்கிநேரத்தில் ஒரு குழிவெட்டியும், இரவில் நெடுநேரம் வாயில் ஜலங்கொண்டுவந்து, மாதுளங் கட்டைகளுக்கு வார்த்தும், அன்றைப்பொழுதைக் கழித்தான். மறுநாள் வெள்ளிக்கிழமை யாதலால், கிழச் சந்யாஸியின் ப்ரேதத்தை யெடுத்து அடக்கஞ் செய்யலாமென்றிருக்கும்போது, அருகிலுள்ள நகரத்திலிருந்து அநேக ஜனங்கள் வழக்கப்படி ஸந்யாஸியைப் பார்ப்பதற்காக வந்தார்கள். ஒவ்வொருவரும் தங்கள் கையில் கிடைத்ததைக் கிழவருக்கென்று கொண்டு வந்திருந்தார்கள். இங்கே வந்ததும், கிழவர் இறந்துபோனதையும், தன் சிஷ்யனாக இவனைப் பாவித்ததையும் அவர்கள் அறியச்சொன்னான். அவர்களும் வேண்டிய உதவியைச் செய்துவிட்டு, கையிற் கொண்டுவந்த உண்டி, பழவர்க்கங்கள் முதலிய ஸகல ஸாமான்களையும், ஸந்யாஸி ஸ்தாநத்தையடைந்த சிஷ்யனுக்குக் கொடுத்து, மறுபடியும் வந்து பார்ப்பதாகவுஞ் சொல்லிவிட்டுப் போயினர்.

---

**வெளிநாட்டுச் சந்தா நேயர்களுக்கு**

நம் நேயர்களில் பலர், சந்தா பாக்கியை அனுப்பாது மௌனம் சாதிப்பது எமக்கு மிகுந்த கஷ்டத்தைக் கொடுக்கிறதென்பதை மறுபடியும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

—மானேஜர்.

---

ஆயக்காரன் அஞ்சுபணம் கேட்பான், அதாவெட்டுக்காரன் ஐம்பது பணம் கேட்பான்.

# பனி: மழை

## DEW AND RAIN

உஷ்ணமானது பொருட்களை விரியச்செய்யும் தன்மை உடையது. ஜலத்தின்மேல் எவ்வித உஷ்ணமாவது பட்டால், அது கொஞ்சங் கொஞ்சமாய் ஆவியாக விரிந்து, மேலே எழும்பிப்போம். திருஷ்டாந்தமாக, ஒரு சட்டியில் கொஞ்சம் ஜலத்தை வார்த்து வெய்யிலில் வைத்தா[illegible], சூரிய உஷ்ணத்தினால் அந்த ஜலத்தினின்று ஆவி எழும்ப, அது படிப்படியாய் அளவில் குறைந்து கடைசியில் ஒன்றுமில்லாமல் போய்விடும். அல்லது, ஒரு பானையில் ஜலம் வார்த்து அடுப்பின்மேல் வைத்தால், நெருப்பின் உஷ்ணத்தால் பானையிலுள்ள ஜலம் ஆவியாக எழும்ப, அது வரவரக் குறைந்து, கடைசியில் ஒன்றுமில்லாமல் சுண்டிப்போம்.

இவ்வாறே பூமியின் மேற்புறத்திலுள்ள பற்பல சமுத்திரங்கள், கடல்கள், ஏரிகள், ஆறுகள் முதலியவற்றிலுள்ள ஜலமானது சூரிய உஷ்ணத்தால் இடைவிடாது நீராவியாக மாறுகின்றது. இப்படியுண்டாகும் நீராவி, ஆகாயத்தைப் பார்க்கிலும் இலேசானபடியால், அது மேலே எழும்புகின்றது. உயரப் போகப் போக அதிகக் குளிர்ச்சியுள்ளதா யிருக்குமாகையால், அக்குளிர்ச்சியினால் நீராவியின் அணுக்கள் நெருங்கிச் சேருகின்றன. இப்படி நெருங்கிச் சேருகிற நீராவிதான் மேகங்களாகின்றன.

நீராவியின் அணுக்கள் மிகவும் நுட்பமானவைகளாதலால், அவை சிதறியிருக்கையில், நமது கண்ணுக்குத் தெரிகிறதில்லை; ஆனால் அவை நெருங்கும்போது, புகைபோலும் மேகம்போலும் தோன்றும். உஷ்ணமானது பொருட்களை விரியச் செய்கிறதுபோல, குளிர்ச்சியானது, அவற்றைச் சுருங்க அல்லது நெருங்கச் செய்கின்றது. ஆகையால் நீராவியின் அணுக்கள்மேல் எவ்வித குளிர்ச்சியாவது பட்டால், அவைகள் நெருங்கச் சேர்ந்து, கடைசியில் நீர்த்துளிகளாக மாறிக் கீழே விழும். திருஷ்டாந்தமாக, உலைப்பானையின் வாயை ஒரு சட்டியைக்கொண்டு மூடிவைத்தால், பானைக்குள்ளிருந்து எழும்பும் நீராவியானது மேல்சட்டியில்போய் நிறையும். பின்பு அச்சட்டியை எடுத்துக் காற்று முகமாய்ச் சாய்த்தால் அதிலடைந்திருக்கும் ஆவியானது காற்றின் குளிர்ச்சியால் நெருங்கிச் சேர்ந்து நீர்த்துளிகளாகிக் கீழே விழுவதைக் காணலாம். சூரிய வெப்பத்தினால் சமுத்திரம் முதலியவற்றினின்று ஆவியாக எழும்பிப் பின்பு மேகங்களாகிற நீராவிக்கும் இப்படியே சம்பவிக்கிறது.

மின்சாரத்தினாலாவது, அல்லது வேறு காரணத்தினாலாவது, மேகங்கள் சஞ்சரிக்குமிடத்திலுள்ள ஆகாயத்தில் சடுதியாய்க் குளிர்ச்சியுண்டாகும்பொழுது, மேகங்களிலடங்கிய நீராவியின் அணுக்கள் அதிக நெருக்கமாய்ச் சேர்ந்து நீர்த்துளிகளாகின்றன. இந் நீர்த்துளிகள் ஆகாயத்தைப் பார்க்கிலும் அதிக கனமுள்ளவைகளானபடியால், அவை மேகமண்டலத்தினின்று விசையாய் வந்து, பூமியின்மேல் விழுந்து, அதைச் செழிப்பிக்கின்றன. இதையே நாம் மழையென்று சொல்லுகிறோம். மழையுண்டாகும் விதம் இதுதான்.

உலகத்தின்கண்ணுள்ள மனிதன் முதலிய ஜீவகோடிகளனைத்திற்கும் ஆதாரமான புல் பூண்டு விருக்ஷங்கள் செழிப்பாய் வளர்ந்தோங்கித் தத்தம் பலனைக் கொடுத்துவரும்பொருட்டுப் பூமியாகிய விஸ்தாரமான தோட்டத்திற்குக் கடவுள் நீர்பாய்ச்சி, அதைப் பரிபாலனம் பண்ணும் விதம் மஹா விநோதமும் அதிசயமுமானது. எப்படியெனில், சமுத்திரத்தினின்று சூரிய உஷ்ணத்தினால் நீராவி எழும்பி மேகங்களாகின்றது. இம்மேகங்கள் சமுத்திரத்திற்கு மேலேயே நிற்காதபடிக்குக் காற்றுகள் அவற்றைப் பூமிக்குமேலே தள்ளிக்கொண்டு போகின்றன. பின்பு மேகமண்டலத்தில் மின்தாதுவினால் சில குழப்பங்கள் நேரிட்டு அதிகக் குளிர்ச்சியுண்டாக, மேகங்களிலுள்ள நீராவி மழைத் துளிகளாகி, பூமியின்மேல் விழுந்து பூண்டுகளைச் செழிக்கப் பண்ணிவிட்டுக் கடைசியில் ஆறுகள் வழியாகச் சமுத்திரம்போய்ச் சேருகிறது.

பனியுண்டாகும் விதத்தை நாம் கிரகித்துக் கொள்ளும்பொருட்டு, உஷ்ணத்தைப்பற்றிச் சில பிரமாணங்களை முதலில் கவனிக்க வேண்டும்.

ஒரு இரும்[illegible] குண்டைப் பழுக்கக் காய்ச்சி ஓரிடத்தில் வைத்தால் அதிலுள்ள உஷ்ணம்

ஆண்மையற்ற வீரன் ஆயுதத்தைப்பழிப்பான்; வல்லவனுக்குப் புல்லு மாயுதம்.

படிப்படியாய் அதை விட்டு நீங்க, அது முன்னிருந்த பிரகாரமே குளிர்ந்துபோம். இப்படி உஷ்ணம் அக்குண்டை விட்டு நீங்கும் விதம் யாதெனில்: (1) உஷ்ணமாக்கப்பட்ட அவ்விரும்பு குண்டைத் தொட்டுக்கொண்டிருக்கும் பொருள்களுக்குள் அதன் உஷ்ணம் கொஞ்சம் கொஞ்சமாகச் செல்லும். இதனால் தான் அப்பொருட்களுக்கு முன்னில்லாத உஷ்ண முண்டாகிறது. (2) ஒளியுள்ள வஸ்துக்களினின்று வெளிச்சத்தின் கதிர்கள் எத்திசையிலும் பறந்து போவதுபோல உஷ்ணமாக்கப்பட்ட அவ்விரும்பு குண்டினின்று உஷ்ணத்தின் கதிர்கள் எத்திசையிலும் பறந்து செல்கின்றன.

இதனால்தான் நாம் அவ்விரும்பு குண்டைத் தொடாது சற்றுத் தூரத்திலே நின்றாலும் அதிலுள்ள உஷ்ணம் நம்மேல் வந்து தாக்குகின்றது. மேலேகாட்டிய இவ்விரண்டு வகைகளால்தான் உஷ்ண மாக்கப்பட்ட பொருள்க ளெல்லாம் வரவரத் தம்மிடமுள்ள உஷ்ணத்தை இழந்து சுற்றிலுமுள்ள பொருட்களுக்குச் சமமாய்க் குளிர்ந்துபோகின்றன.

உஷ்ணமாக்கப்பட்ட பொருள்களினின்று உஷ்ணத்தின் கதிர்கள் வெளியே பறந்துபோய் அவைகள் குளிர்ந்து போகின்றனவென்று சொன்னோம். ஆனால் சிலவகைப் பொருள்களிலிருந்து உஷ்ணம் விரைவாயும் அதிகமாயும் வெளியே செல்லுகின்றது. வேறு வகைப் பொருட்களினின்றோ உஷ்ணம் வெகு தாமசமாயும் மிதமாயும் வெளிப்படும். திருஷ்டாந்தமாக, கல் மண் முதலிய பொருட்களைப் பார்க்கிலும் புல் பூண்டு விருக்ஷங்களி லிருந்தும், வெள்ளை நிறமுள்ள வஸ்துக்களைப் பார்க்கிலும் கறுப்பு நிறமுள்ள வஸ்துக்களி லிருந்தும், பளபளப்பும் நுணுக்கமுமான பொருட்களைப் பார்க்கிலும் மங்கலும் கரடுமுரடுமான பொருட்களிலிருந்தும், உஷ்ணமானது அதிகமாயும் விரைவாயும் வெளிப்பட, அவ்வஸ்துக்கள் வெகு சீக்கிரத்தில் குளிர்ந்துபோம்.

சூரிய கதிர்களாலும், வேறு காரணங்களினாலும், பூமியானது உஷ்ணமாக்கப்படுகிறது. இப்படிப் பூமிக்கு உண்டாகும் உஷ்ணம் பூமியினின்று இரவும் பகலும்இடைவிடாது வெளிப்பட்டு ஆகாய வழியாய்ப் பறந்து போகின்றது. ஆனால் பகல் காலத்தில் உஷ்ணத்தின் கதிர்கள் பூமியினின்று புறப்பட்டு ஆகாயமார்க்கமாகச் செல்லச்செல்ல, சூரியனிடத்தினின்று உஷ்ணத்தின் கதிர்கள் பூமியின்மேல் விழுந்து அதற்குள் பிரவேசிக்கின்றன. ஆகையால், பகலில் பூமியினின்று வெளிப்படுகிற உஷ்ணமும் ஏறக்குறைய ஸமமாகின்றது.இரவிலோ, இப்படியல்ல. அப்பொழுது சூரியனுடைய கதிர்கள் பூமியின்மேல் படாதிருக்க, பூமியினின்றுமாத்திரம் உஷ்ணம் பகலில் போலவே வெளிப்பட்டுக்கொண் டிருக்குமாகையால் பூமி வரவரக் குளிர்ந்து தன்னைச் சுற்றியிருக்கும் ஆகாயத்தைப் பார்க்கிலும் அதிகக் குளிர்ச்சியுள்ள தாகின்றது. பூமி அதிகக் குளிர்ச்சியுள்ளதாகவே, அதை ஒட்டிக்கொண் டிருக்கும் ஆகாயத்தின் அடிப் பாகமும் குளிர்ந்து, அதி லடங்கியிருக்கும் நீராவியானது குளிர்ச்சியினால் நெருங்கி, கனங்கொண்டு பனியுருவம் தரித்துப் பூமியின்மேல் விழுகிறது. உஷ்ணத்தினால் பூமியிலிருந்து எழும்பும் நீராவியானது மேகங்களாகிறதுந் தவிர, அதில் ஒரு பாகம் ஆகாயத்தில் நன்றாய்க் கலந்திருக்கும். எவ்வேளையிலும் எவ்விடத்திலும் ஆகாயத்தில் கொஞ்சமேனும் நீராவி கலந்திருக்குமே யல்லது வேறல்ல. ஆகையால், பூமியின் மேற்புறம் அதிகமாய்க் குளிர்ந்த உடனே அதோடு ஒட்டியிருக்கும் ஆகாயத்தின் அடிப்பாகத்திலுள்ள நீராவியானது குளிர்ச்சியினால் நெருங்கிப் பனியாகப் பெய்கிறது. இதுவே பனியுண்டாகும் விதம்.

பகலில் வெய்யில் காய்ந்து, இரவில் காற்றும் மேகங்களும் இல்லாமலிருந்தால், அவ்விரவில் பனி அதிகமா யுண்டாகும். இதற்கு முகாந்திர மென்னவெனில், பகலில் அதிகமாய் வெய்யில் காயுமானால், சூரிய உஷ்ணத்தால் பூமியினின்று அதிக நீராவி எழும்பி ஆகாயத்திற் சேரும். ஆகாயத்தில், அதிக நீராவி அடங்கியிருந்தால் பூமி குளிரும்போது அதிகமான பனி யுண்டாவதற்கு இடமுண்டாகும். இரவில் பூமிக்கு மேலே மேகங்கள் முதலிய தடைகள் ஒன்றுமில்லாதிருக்கும் போது, பூமியினின்று உஷ்ணத்தின் கதிர்கள் வெகு தாராளமாய் எழும்பிப்போக இடமிருக்கும். அதனால் பூமி விரைவாய்க் குளிர்ந்து விடும். இக்குளிர்ச்சியினால் ஆகாயத்தில்

மிருந்திருக்கும் நீராவி குளிர்ந்து நெருங்கி மிருந்த பனி பெய்யும். மேகங்கள் இருக்குமானால், பூமியினின்று எழும்பும் உஷ்ணத்தின் கதிர்கள் மேகங்களை எட்டின உடனே அவற்றால்தடைபட்டுத்திரும்பிப் பூமியினிடத்திற்கே வரும். இதனால் பூமி தகுந்த அளவு குளிர இடமிராது. ஆகையினால் ஆகாயத்திலுள்ள நீராவி குளிர்ந்து பனியாக மாற ஏதுவ மில்லாமல்போம். மேலும், பூமிக்கு மேல் சற்று உயரத்தில் ஒரு மரப் பலகையாவது அல்லது வேறெந்த மறைவையாவது வைத்திருந்தால் பலகைக்குக் கீழுள்ள பூமியினின்றும் எழும்பும் உஷ்ணத்தின் கதிர்கள் பலகையால் தடைபட்டுத் திரும்பிப் பூமிக்கே வருமாகையால், அப்பூமி தகுந்த அளவு குளிராமல் அதை அடுத்திருக்கும் ஆகாயத்திலுள்ள நீராவி பனியாக மாற இடமிராது. இதனால் அப்பூமின்மேல் பனி படிந்திராது. ஆனால் அப்பலகையின் மேல்பக்கத்திலிருந்து எழும்பும் உஷ்ணத்தின் கதிர்கள் தடையின்றி ஆகாய மார்க்கமாய்ச் செல்ல, அது சீக்கிரத்தில் குளிர்ந்து அதை யடுத்திருக்கும் ஆகாயத்திலுள்ள நீராவி பனியாகி, அதன்மேல் படிந்திருக்கும். காற்று வீசிக்கொண் டிருக்கும்போது பூமியை அடுத்தாற்போலிருக்கும் ஆகாயம் நிலைமாறிக்கொண் டிருக்குமாகையால், அதில் அடங்கிய நீராவியானது போதுமான அளவு குளிர்ந்து பனியாக மாற இடமிராது. இதனால் காற்றுள்ள சமயத்தில் பனியிராது.

சிலவகை வஸ்துக்களினின்று உஷ்ணம் அதி விரைவாய் நீங்க, அவைகள் அதி சீக்கிரத்தில் குளிர்ந்துபோகின்றனவென்று முன் சொன்னோம். அப்படிப்பட்ட பொருள்களை அடுத்திருக்கும் ஆகாயத்தில் அடங்கியிருக்கும் நீராவி அதி சீக்கிரத்தில் குளிர்ந்து, பனியாகி அவற்றின்மேல் படிந்திருக்கும். இதனால்தான் கல் மண் முதலியவற்றைப் பார்க்கிலும் புல் பூண்டு விருக்ஷங்கள்மேலும், வெள்ளைநிறமுள்ள வஸ்துக்களைப் பார்க்கிலும், கறுப்பு நிறமுள்ள வஸ்துக்களின்மேலும் பளபளப்பும் நுணுக்கமுமான வஸ்துக்களைப் பார்க்கிலும் மங்கலும் கரடு முறடுமான வஸ்துக்களின்மேலும், பனி அதிகமாய்ப் படிந்திருப்பதைக் காண்கிறோம்.

---

# சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

### குழந்தையை வளர்த்த பெண் ஓநாய்

காட்டில் வாழும் மிருகங்களுக்கு அன்பு முதலிய நற்குணங்கள் இருக்கின்றனவா? ஆம், இருக்கின்றன. மனிதர்கள் தம் குழந்தைகளை எவ்வளவு அன்புடன் வளர்க்கின்றார்களோ, அவ்வளவு அன்புடன் பட்சிகளும், மிருகங்களும், தத்தம் குஞ்சுகளையும் குட்டிகளையும் வளர்க்கின்றன. பூனையையாவது நரியையாவது கண்டபோது கோழி தன்குஞ்சுகளை அழைப்பதும், தன்னிடமிருக்கும் கன்றைப் பிரிக்க ஒருவன் வந்தால் அவனைக் கொம்புகளால் முட்டிப் பாயவரும் பசுவையும், நாம் அடிக்கடி காண்கிறோம். ஸாதாரணமாய், ஒரு மிருகம் மற்றொரு மிருகத்தையாவது, அல்லது அதன் குட்டியையாவது அன்புடன் உறவு கொண்டாடுவ தில்லை. ஆனால், பின்வரும் கதையினால் காட்டு மிருகங்களும் அன்பு ஜீவகாருண்யம் முதலிய குணங்களை உடையனவாயிருக்கின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள்.

ஓநாய்களும், சிறுத்தைகளும் நிறைந்த காட்டின் அருகே ஒரு கிராமம் இருந்தது. அவ்வூரிலிருந்த குடியானவள் ஒருத்தி, தன் இளங்குழந்தையுடன் சுள்ளி பொறுக்குவதற்காக அக்காட்டிற்குள் சென்றாள். அவளது கணவன் கூலி வேலைசெய்து அன்றாடம் பிழைத்து வருபவன். அவர்களுக்கு வெகு நாள் கழித்து, பல கோயில்களில் பூஜை செய்த பிறகு, ஒரு பெரியவரின் ஆசீர்வாதத்தால் அக்குழந்தை பிறந்தது. குழந்தை பெரிய ஸ்திதிக்கு வருவான் என்று அப்பெரியவர் கூறியிருந்தமையால், பெற்றவர்கள் மிகவும் ஆசையுடன் குழந்தையை வளர்த்து வந்தார்கள்.

சுள்ளிபொறுக்கப்போன ஸ்திரீ, குழந்தையை மரத்தடியில் விட்டுவிட்டு, பக்கத்தில் சுள்ளி

---

ஆத்தை படுகிற பாட்டுக்குள்ளே மகன் மோருக்கு அழுகிறான்.

பொறுக்கிக்கொண்டிருந்தாள். திடீரென உறுமுதல் கேட்டது. அவள் திரும்பிப்பார்த்தாள். ஆ! பருத்த கோர முகமும், வெறித்து நோக்கும் கண்களும், பயங்கரமான பற்களுமுள்ள ஓநாயொன்று புதர்லொன்றிலிருந்து இவளைப்பார்த்து உறுமிற்று. பார்த்தாள். அந்த ஸ்திரீ பயத்தால் நடுநடுங்கி, பொறுக்கின சுள்ளிகளைக் கீழே எறிந்துவிட்டு, தன் குழந்தையின் ஞாபகமின்றி, அலறிக்கொண்டே ஓடினாள்.

அவள் ஊருக்குச் சென்ற பிறகே தன் குழந்தையின் நினைவு அவளுக்கு வந்தது. "ஐயோ? என் குழந்தையை விட்டுவிட்டு வந்தேனே.—பாவி" என்று அலற, அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் அவளழுகையைக் கேட்டு நடந்தவைகள் அனைத்தையும் அறிந்தனர். உடனே புருஷர்கள் இருபது பேர் கையில் தடிகளும், கத்திகளும் எடுத்துக்கொண்டு அந்த ஸ்திரீயுடன் அவள் சுள்ளிபொறுக்கின இடம்சென்றனர். அங்கு குழந்தையைக் காணோம். ஐயோ குழந்தையைக் கைவிட்ட துரோகியானேனே!" என்று அழுது, புலம்பிக் கொண்டிருந்தாள் அக்குழந்தையின் தாய்.

முன்னே குழந்தை பிறப்பதற்குமுன் ஆசீர்வாதம் செய்த பெரியவர் வர, அவரைக் குடியானவனும் அவன் மனைவியும் கண்டு முறையிட்டனர். பெரியவர் அவர்களைப் பயப்படாதிருக்கும்படி சொல்லி, அவர்கள் குமாரன் இறக்கவில்லை யென்றும், இன்னம் சில வருஷங்கள் கழித்து, திரும்பிவருவானென்றும் கூறிச் சென்றனர். இதைக்கேட்டு மனப்பால் குடித்துக் காலங் கழித்து வந்தனர் கணவனும் மனைவியும்.

பத்து வருஷங்களுக்குப் பிறகு, அக் குடியானவன் மனைவி அந்தக்காட்டினருகே போயிருந்தாள். அவளுடன் சில ஸ்திரீகளும், புருஷர்களும் வந்திருந்தனர். சுள்ளி பொறுக்கிக் கொண்டு ஸ்திரீகளும், மரத்தை வெட்டிக் கொண்டு புருஷர்களுமிருக்கும்போது, ஓநாய்க் கூட்ட மொன்று இவர்களிருக்கும் வழியாக ஓடி, பல மனிதர்கள் இருப்பதைக்கண்டு, ஓட்டம் பிடித்தது. அக்கூட்டத்தோடு சிறுவனொருவனும் ஓடிவந்தான். ஓநாய்கள் ஓடிவிட்ட போதிலும், இவன் ஓடாமல், வேலை செய்துகொண் டிருந்தவர்களைக்கண்டு வியப்புற்று நின்றான். குடியானவர்கள் அவனைக் கூப்பிட்டு ஓநாய்களிடம் அவனிருக்கக் காரணம் என்னவென்று கேட்டார்கள். அவன் தனக்குப் புத்தி தெரிந்ததுமுதல் ஓநாய்களிடமே வளர்ந்துவந்ததாகவும், பெரிய பெண் ஓநாய் ஒன்று தனக்கு உணவு வெகு நாள் கொண்டுவந்துகொடுத்ததாகவும், பிறகுதானே கிழங்கு கனி முதலியவைகளைத் தின்று பிழைத்துவருவதாகவும் சொன்னான். இவன் சொன்ன கதையும், தோற்றமும், தன் குழந்தையை யிழந்தவளுக்கு, காணமற் போன குழந்தை இவன்தானே என்ற ஸந்தேஹத்தை உண்டாக்கிற்று. பையனை அழைத்து அவனுடம்பிலுள்ள மச்சம் முதலிய அடையாளங்களைக் கண்டதும், தன் குழந்தைதானென்று நன்றாய் அறிந்தாள் அந்த ஸ்திரீ. அவள்மனம் பூரித்தது. தன் மகனைக் கட்டித்தழுவி, ஊருக் கழைத்துக்கொண்டுபோய்த் தன் பந்துக்களுக் கெல்லாம் விருந்துசெய்வித்தாள். பிள்ளை பெற்றெடுத்துப் பிறகு பிரிந்த தாயாருக்குத் தன் குழந்தையைக் கண்டபோது எவ்வளவு ஸந்தோஷமுண்டாயிருக்கும் என்பதை நீங்களே அறிந்துகொள்ளலாம்.

சில வருஷங்கள் கழிந்தன. ஓநாயால் வளர்க்கப்பட்டுவந்தசிறுவன், பெரியவனாகித் தேகபலமும் திடகாத்ரமும் பொருந்தியவனான். அவன் பெற்றவர்களும் ஏழ்மைநீங்கி ஸுகமாக இருந்தனர். அருணாசலம் என்று பேர்கொண்ட இவன் ஊருக்குப் பெரியவனாகி, தன்னூரிலேயே பெரியமனிதன் ஒருவனுடைய மகளையும் விவாகம் செய்துகொண்டான். அன்பு, ஆதரவு, ஜீவஜந்துக்களிடம் தயை முதலிய குணங்கள் நிறைந்தவனாய் இருந்தான்.

காட்டிலிருந்த கொடியவிலங்குகளால் ஊருக்குக் கெடுதி அதிகம்உண்டாயிற்று. பசுக்களும் மாடுகளும், கோழிகளும் ஓநாய் சிறுத்தை முதலியவைகளால் மிகவும் கஷ்டப்பட்டன. இதைத் தீர்க்கவேண்டுமென்று ஊரார் தீர்மானித்து, தடி முதலிய ஆயுதங்கள் எடுத்துக் கொண்டு காட்டைச் சுற்றிக்கொண்டனர். அன்றைய தினம் கொல்லப்பட்ட கொடிய விலங்குகள் அநேகம்.

காட்டின் மத்தியில் வேட்டையாடுபவர்கள் வந்தனர். அருணாசலமும் அங்கே நின்று கொண்டிருந்தான். 'ஓநாய், ஓநாய்!' என்ற கூச்சல் உண்டாயிற்று. அனைவரும் தம் கையி

விருந்த தடிகளைக் கெட்டியாய்ப் பிடித்தனர். உடம்பெல்லாம் ஒடுங்கி, எலும்பு தெரிய, கோரமான பற்களையுடைய கிழ ஓநாய் ஒன்று புதரினின்று ஓடிவந்தது. அது சுற்றியிருக்கும் தடிபிடித்த கூட்டத்தைக் கண்டு சற்றுத்திகைத்தது; மனிதக் கூட்டத்தைச் சுற்றிப்பார்த்தது. பிறகு ஓரே பாய்ச்சலில் அருணாசலமருகே வந்து, அவனடையாளம் பார்ப்பதுபோல முகத்தைச் சற்றுநோக்கி, தன் முகத்தை அவனருகே வைத்தது.

அருணாசலம் அதைக் கண்டதும் ஸந்தோஷமடைந்தான். "அம்மா, நீயா, இத்தனை நாளாய் எப்படியிருந்தாய்? உன்னை ஒருவரும் கொல்ல மாட்டார்கள். என்னுடன் வா" என்றான்; தன்னை வளர்த்த ஓநாய் அதுதானென்று சுற்றியிருப்பவர்களிடம் கூறினான். அனைவரும் ஆச்சரியமடைந்தனர். தன்னுடனேயே அந்தக் கிழ ஓநாயை அழைத்துக்கொண்டுபோய், தன் வீட்டில் அதற்கு உணவுவைத்து, "அம் தினந்தோறும் நீ இங்கே வந்து விட்டு உன்னைக் காப்பாற்றுவது என் கடமை என்று சொல்லி அதை அனுப்பினான்.

இறக்கும்வரை அது அவன் வீட்டிற்குத் தினந்தோறும் வந்துகொண்டிருந்தது. குழந்தைகளையாவது, ஜந்துக்களையாவது அது ஒன்றும் செய்வதில்லை. அவ்வூராரும் அதை அன்புடன் நடத்தினர்.

இதுவன்றோ உண்மை அன்பு! பச்சைப் பாலகனை அந்த ஓநாய் வளர்த்தது அக்குழந்தையின் சிறுவயதில். ஓநாயின் கிழதிசையில் அதன் ஸ்வீகாரப்பிள்ளை அதை வளர்த்தான். ஜாதியென்ன பேதமென்ன அன்பில்!

---

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

### தமயந்தி : 18-வரம்

இதற்குள் தேர் வெகுதூரஞ் சென்றுவிட்டது. அவ்வாறு செல்லும்போதெதிரில் ண்ட தான்றி மரத்தைச் சுட்டிக்காட்டி லமை மிக்க வாஹுகரே! எனக்கு எண் ில் உள்ள சாமர்த்தியத்தை உமக்குக் விரும்புகிறேன். 'எல்லார்க்கும் ஒவ் றெளி'தல்லவா? வித்தைகள் எல்லா முழுதும் உணர யாவர்க்கும் . அவ்வாறு இருந்தால் கடவுளுக்கும் ருக்கும் பேதமெப்படி ஏற்படும்? ஆகவே கடவுள் எல்லாப் படிப்பையும் ஒருவனுக்கே தந்திரார். அதோ அங்கு தெரியும் தான்றி மரத்தில் இத்தனை காய்கள், இத்தனை இலைகள், இத்தனை பூக்கள், இத்தனை கிளைகள் இருக்கின்றனவென்று என்னால் சொல்லக்கூடும். அதோ கீழ் வீழ்ந்திருக்கும் கிளையில் இருக்கும் இலைகள் நூறல்ல; அதற்குமேல் ஒன்று. அதிலிருக்கும் பழத்தின் தொகையுமவ்வளவே. இதோ நம்புறமாக விழுந்துகிடக்கும் தான்றிக் காய்களின் தொகை ஒன்றுடன் சேர்ந்த ஆயிரமாகும். நம் கண்ணெதிரே இருக்கும் இரண்டு கிளைகளிலும் உள்ளன ஐந்து கோடி இலைகள்; மேலொன்றுங் கிடையாது. நம் வலப் பக்கமாகச் சாய்ந்து கிடக்கும் பெருங்கிளையில், அதன் சிறுகிளைகளுள்பட உள்ள பழங்கள் இருபது நூற்றுக்குநூறுடன் ஐந்து குறைவு" என வெகு உத்ஸாகத்துடன் சொல்லிக்கொண்டிருந்தான்.

இம்மொழிகளை வாஹுகனால் நம்ப முடியவில்லை. அவற்றைப் பரீக்ஷித்து உண்மையறிய வேண்டுமென அவனுக்கு அவா எழும்பியது. உடனே அவன் தேரை நிறுத்தி, ருதுபர்ணனைப் பார்த்து "அரசரேறே! நீங்கள் சொல்லுவதை அத்தாக்ஷியில்லாது என்மனம் ஒப்ப இடந்தரவில்லை. கோபித்துக் கொள்ளக் கூடாது. இத்தான்றிமரத்தை வெட்டி நீங்கள் சொல்லிய கணக்கைப் பரிசோதிப்பேன். அதன்பின் தாங்கள் எது சொல்லினும் நம்புவேன். பிரத்யக்ஷ அனுபவத்தாலன்றோ ஐயம் அறவேண்டும்? அதுவரையில் தயவு செய்யும். இதோ ஒரு க்ஷணிக நேரத்திற்குள் அவ்வாறு உம்மெதிரிலேயே செய்து வருகிறேன். அதுவரை வார்ஷ்ணேயன் குதிரைகளின் கடிவாளங்களைப் பிடித்துக் கொள்ளட்டும்" என வெகு ஆவலுடன் சொன்னான்.

"இவ்வாறு தாமஸஞ் செய்ய இதுவல்ல ஸமயம். இதை நீயே அறிவையன்றோ?" என்றான் ருதுபர்ணன்.

“அப்படி யொன்றும் உமக்குக் காலதாமஸம் ஏற்படாது. ஒரு விநாடிப் பொழுது …ான் யான் வேண்டுவது. அதுவரை உமக் …த்தாமஸிக்க முடியாத அவஸரமானால் …று செய்யும். இதோ நேரே போகும் வழிதான் விதர்ப்பத்திற்கு வழி. வார்ஷ்ணேயன் என்னைப்போலவே தேரை வெகு விரைவாக ஓட்டுவான். அவனைக்கொண்டு நீங்கள் உடனே விதர்ப்பையடையும். நான் இதற்குள் இத்தான்றிக் கிளைகளில் இருக்கும் இலைகளையும் பழங்களையும் எண்ணி உமது, கணித ஸாமர்த்தியத்தை யறிந்து மகிழ்வேன். தயவு செய்யும், சீக்கிரம்! சீக்கிரம்!” என்று சொல்லிக்கொண்டு தேரைவிட்டு நளன் குதிக்கயத்தனித்தான்.

இதைக் கண்ட அயோத்திக் கரசன் “இது ஏது கிணறுவெட்டப் பூதம் புறப்படுவதுபோலாயிற்றே! பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்ததுபோல நமது மொழிகள் எதிர்பாராதபடி கார்யத்தை விளைத்துவிட்டதே” என நினைத்து, வாஹுகனை நோக்கி “ஐயா வாஹுகரே! முன் வைத்தகாலைப் பின்வைப்பது தங்களுக்கு நீதமா? உம்மிலும் ஸாரத்யத்தில் வல்லவர் உலகத்தில் இல்லை. உம்மாலே யல்லவா விதர்ப்பம் அடைய யான் விருப்பமுற்றது? படித்தறிந்த பெரியோர்கள் சரணனடைந்தவரைத் தள்ளுவதுண்டோ? நீங்கள் இருக்க எனக்கென்ன குறை? ஸாயங்காலத்திற்குள் நாம் விதர்ப்பம் போய்ச்சேரவேண்டும். அது தவறாதிருக்க வேண்டியது. இவ்விஷயத்துக்குத் தடை ஏற்படாமல் நீங்கள் எது செய்தாலும் எனக்கு இஷ்டந்தான்; எது செய்யச் சொன்னாலுஞ் செய்கிறேன்” என்று சொன்னான்.

“யான் இந்தத் தான்றிக் கிளையிலுள்ள இலைகாய்களை எண்ணித்தான் தேரை விடுவேன். அதுவரை எனக்குச் செலவு தரவேண்டும். அதனால் ஒருவித இடையூறும் உமக்குண்டாகாது பார்த்துக்கொள்வதென் கவலை. சற்றே பெரிய மனங்கொண்டெனக்கு உத்தரவளிக்க விரும்புகிறேன்” என வாஹுகன் கேட்க, ருதுபர்ணனும் அதற்கிணங்கினான். “வாஹுகரே! ஒரு பானைச் சோற்றுக்குப் பதம்பார்ப்பது, பருக்கை ஒன்றையே யல்லவா? அம்மாதிரியே அக்கிளையில் யான் குறிப்பிட்டுச் சொன்ன சிறு கிளையைமாத்திரம் எண்ணிப் பாரும். அதிலிருந்து, யான் சொல்வதின் உண்மை முழுதும் விளங்கும். அதனாலேயே உமது மனத்துக்குச் சமாதான மேற்படும்” என்று மேலுங் கூறினான். உடனே வெகு ஸந்தோஷத்துடன் வாஹுகன் தேர்விட் டிழிந்து, தான்றிக்கிளையை யடைந்து, அதிலிருந்த இலை, காய், பழங்களை எண்ணி, அரசன் சொல்லியவாறேயிருக்கக்கண்டு, ஆச்சரியமுற்று, அளவிலானந்தத்தில் ஆழ்ந்து, “அரசச் சிங்கமே! உமது கணக்கிடும் வல்லமை புகழ்தற்குரியது. அது அதி அத்புத சக்தி. அதை யான் இன்று காணப் பேரானந்த மடைகிறேன். எவ்வழியே இவ்வித்தையைக் கற்றீரோ அதை யறிய விரும்புகிறேன். எனது அவாவைப் பூர்த்தி செய்வீரென நம்புகிறேன்” என ருதுபர்ணனைக் கேட்டனன்.

பாடத் தெரிந்தவனைப் ‘பாடு’என்று கேட்டால் மயங்குவதுபோல, ருதுபர்ணன் சற்றே யோசித்துப் பேசாது மௌனமாயிருந்தான். ஆனால் அவனுக்குத் தன் காரிய மாகவேண்டிய தொருபாலிருக்க, வாஹுகனிடமிருந்து அசுவவித்தையைக் கற்கவேண்டுமென்ற அவாவுமிருந்தது. எனவே அவன் அதற்கிணங்குமுன், வாஹுகன் “அரசே! என்னிடமிருந்து குதிரைச் சாஸ்திரத்தைக் கற்றுக்கொள்ளு… எனக்கு உமது கணித சாஸ்திரத்… சொல்லிக்கொடும். உமக்கென்ன வித்… தெரியும்? தயவுசெய்யலாமன்றோ?” எ… “எனக்குச் சொக்கட்டானுடும் வி… கணக்கிடும் சாஸ்திரமும் நன்குதெரி… கவற்றைச் சொல்லித்தருகிறேன்; … கொள்ளும்” எனச்சொல்லி ருதுபர்ண… விரண்டு நூல்களையும் வாஹுகனுக்கு உட… தேசித்தான்; மேலும் விதர்ப்பத்தை அடையும் ஆத்திரத்தில் “எனக்கு நீங்கள் தரவேண்டிய குதிரைச் சாஸ்திரத்தை உம்மிடமே வைத்திரும். நான் பின் கற்றுக்கொள்கி…றேன்” எனவும் சொன்னான்.

வாஹுகன் சொக்கட்டான் கல்வியைப் பயின்றதும், நளனுடைய உடம்பில் தங்க முடியாது கலி தத்தளித்தான். கார்க்கோடகனுடைய விஷத்தின் கொடுமையால் தபித்துக் கொண்டிருந்த கலிக்கு நளனுடையதேகத்தில் இதன்மேல் இருப்பது பெருங் கஷ்டமாயிற்று. எனவே அவன் வாஹுகனது தேக

ஆமணக்கு முத்து ஆணி முத்தாமா? :: ஆமை கிணற்றிலே அணில் கொம்பிலே

த்தைவிட்டு வெளிவந்து, நளன்முன் நிற்கப் பயந்தவன்போல ஓடலானான். அதே சமயம் நளனைப்பற்றியிருந்த கலியின் கொடுஞ்சாபத்தீ அவிந்து செயலற்றது. அச்சமயம் பந்தத்தி லிருந்து விடுபட்டவர் திகைத்துவிளங்குவது போல நளமன்னவர் மயங்கிக் கிடந்தனர்.

இதற்குள், நளனது உடலைவிட்டு வெளி வந்த கலி, கார்க்கோடகனது விஷத்தைக் கக்கிக்கொண்டு தன்னுருவ மடைந்தான். கலியைக் கண்டதும் நளனுக்குவந்த கோபத்திற்கு அளவே யில்லை. கலியைச் சபிக்கவே அவன் எண்ணங் கொண்டான். நளமன்னவரது உள்ளக் கருத்தை யுணர்ந்த கலியன் நடு நடுங்கிப் பயந்து, தன்னிருகரங்களையுங் குவித்து வெகு வணக்கத்துடன் மேல் வருமாறு வேண்டினான்:—

"ராஜசிங்கமே! கோபம் சண்டாளம்: அதை அடக்கலே பெரியோர்க்கு அழகு. செத்தபாம்பை யடிப்பதால் என்ன பிரயோஜனம்? நீர் உமது மனைவியைப்பிரிந்ததுமேஎன்னை அவள் சபித்துவிட்டாள். அச்சாபத்தின் வேகத்தைத் தாங்கமுடியாது பட்டபாடு சொல்லவும் பெறுமோ? போதாக்குறைக்கு, பட்டகாலிலே படும் என்றபடி, உம்மைக் கடித்த கார்க்கோடகனது விஷம் என்னையே கொளுத்தி வந்தது. ஸத்யம் தருமம் தயை முதலிய நற்குணங்கள் தவறாத உம்மிடம் அவ்விஷத்தின் வேகம் தலை காட்டமுடியவில்லை. பொறுமையால் உமக்குக் கெடுதியே நாடிய யான் உம்மிடம் குடிகொண்டிருந்தபோது, அது என்னை என்ன பாடு படுத்தியது! நீரோ மகான்; தர்மசிரேஷ்டர்; உத்தமவீரர்; தயையே யுருவெடுத்தவர். யானோ கலியன். என் பேரைக் கேட்டாலே எவரும் நடுங்குவர். பிறர்க்குக் கெடுதி செய்வதே என் வழி. எனினும் உம்மையே சரணடைகின்றேன்.

தீர்வருமின்னல்தம்மைச்செய்யினுஞ்செய்யசிந்தை
பேரருளாளர்தத்தஞ்செய்கையிற்பிழைப்பதுண்டோ
கார்வரைதனைநிறுத்திக் கனலெழக் கலக்கக் கண்டும்
ஆர்கலி அமரர் உய்ய அமிழ்துபண் டளித்த தன்றே!

ஆகையால் நீங்கள் என்னிடம் கோபிக்கமாட்டீர் என்பது என் திடமான நம்பிக்கை. உம்மிடம் எனக்கு ஆத்திர மிருந்தது உண்மை தான். எனினும் உம்மிடம் பகை என்பது கிடையாது. உத்தம குணங்களுடையவரை எப்படிப் பகை யணுகும்? குணக்குன்றேறி நின்றார்க்கு எதனால் கெடுதியுண்டாக்க முடியும்? உமது புகழினும், உமது மனைவியின் கற்பு உயர்வுடைத்து. உமது குணகணங்களுக்கியைந்த மனைவி அவளே யாவள். யான் செய்த தவறை மன்னித்து என்னைக் காப்பாற்றும். உமக்கு நன்மையே யான் இனிச் செய்வேன்; உமக்கு இழைத்த தீங்கனைத்தையு மொழிப்பேன்; உமக்கோர் வரமுந்தருவேன்;

இழைத்த தீவினை தணந்தனன்; இன்றுதொட்டுன்
வழுத்தி னுரையு மருவலன் மன்ன! [பேர்

பக்தியுடன் உம்மைத் துதிக்குமவன், எவனாயினுஞ் சரி, அவனுக்கு என்னால் ஒருவித பயமும் ஏற்படாது. உமது நாமஸ்மரணையே யான் செய்யும் வினையைத் தீர்க்கும் மருந்தாயிருக்க யான் உமக்கு வரமளித்திருக்கிறேன். நீர் நெடுநாள் வாழ்வீராக! உமக்கும் உமது உத்தம மனைவிக்கும் என்றும் நன்மையே யுண்டாக!"

இம்மொழிகளைக் கேட்ட நளமன்னவன் கோபந்தணிந்து உள்ளங் குளிர்ந்தான்; தன் பழி நீங்கித் தன்னுணர் வடைந்தான்; ஆவேசத்திலிருந்து உணர்ச்சி பெற்றவன் போலக் களைத்துவிளங்கினான். எனவே அவன் தனக்கு வந்த வித்தையைப் பரீட்சிப்பதுபோல மீண்டும் அத்தான்றிக்கிளையி லிருந்த இலை முதலியவைகளை எண்ணிச்சந்தோஷமடைந்தான்.

கலியும் அதிவேகத்துடன் ஓடி அத்தான்றி மரத்தினுள் ஒளித்துக்கொண்டான். அக்காரணத்தினாலன்றோ, தான்றிமரம் ஜனங்களால் என்றும் அகற்றப்பட்டது! சனியன் பிடித்த பொருளை நாடுபவர் எவரோ?

புத்திமயக்க மொழிந்த நளமன்னவன் ஆனந்தமிகையினால் மெய்மயங்கிக் களித்து, தேரின்மேல் ஏறித் தன் மனைவி மக்களைக் காணவேண்டுமென்ற ஆசை மூண்டு, அதிவேகமாகக் குதிரைகளை ஓட்டினான். அவை பறவைகளெனப் பறந்தோடின. அதன் வேகத்தின் முன் காற்றின் கதியும், ஒளியின் விரைவும், மனத்தின் விசையும் எதிர்நிற்க நாணுமன்றே!

பஞ்சரத்தினம்.—சீதை, ருக்குமிணி, தமயந்தி, சகுந்தலை, சாவித்திரி இவ்வுத்தமிகளின் சரித்திரம் கொண்டது. புதிய பதிப்பு: அழகிய ஆப்டோன் படங்களுடன் விலை அணா 12. சந்தாதார்க்கு அணா 10.

# பிரபஞ்ச வர்த்தமானம்

## NEWS AND NOTES

**பிரிடிஷ் ஸாம்ராஜ்யம்**

துருக்கி ராஜ்யத்துக்குக் கீழ்ப்பட்டிருந்த பாலஸ்டைன் மாகாணம், ஐரோப்பிய யுத்தங் காரணமாக ஆங்கிலேயர் வசம் வந்துள்ள தென்பதை அபிமானிகள் தெரிந்துகொண்டிருக்கலாம். அங்கு ராஜ்யாதிகார விஷயமான சாசுவத ஸ்தானங்கள் ஏற்படுகின்றன வென்பதைக் கேட்கச் சந்தோஷிக்கிறோம். ஸிவில் நியாயஸ்தலங்கள், அப்பீல் நியாயஸ்தலங்கள் முதலியன ஏற்பாடு ஆகின்றன. ஜெருஸலத்தில் அப்பீல் கோர்ட்டும் மற்றைய விடங்களில் பிரதமக் கோர்ட்டுகளும் ஸ்தாபிக்கப்பட் டிருக்கின்றன. கிரிமினல் கோர்ட்டுகள் இங்கிலாந்தில் உள்ளவற்றைப்போல 'ஸர்கியூட்' கோர்ட்டுகளாக இருக்கும். நியாயவிசாரணையில் அனுபவமும், அரபிப்பாஷை ஞானமும் உள்ள ஆங்கிலேய உத்யோகஸ்தர்களுடன் துருக்கிய உத்யோகஸ்தர்கள் இந்தக் கோர்ட்டுகளில் நியமனம் பெறுவார்கள். சில்லரைச் சிப்பந்திகள் அனைவரும் சுதேசிகளாகவே இருப்பார்கள். பொதுவாக தேசத்தில் நடைபெறும் சட்டமே தான் இந்தக் கோர்ட்டுக்களில் செலாவணியாகும்.

* * *

**இந்தியர்களுக்கு ராணுவத்தில் உத்தியோகங்கள்**

இந்தியர்களில் அனேகர், ராணுவத்தில் மேலான உத்தியோகங்கங்களை வகிக்கக்கூடியவர்களென்றும் அவர்களுக்கு அப்படிப்பட்ட பதவிகளைக் கொடுக்கவேண்டு மென்றும் காங்கிரஸ் மஹா நாட்டார் வருஷா வருஷம் கேட்டுவந்ததை அபிமானிகள் அறிவார்கள். இந்த வேண்டுகோளுக்கு இராஜாங்கத்தார் இணங்கும் காலமும் வந்திருக்கிறது. இப்போது நடக்கும் ஐரோப்பிய யுத்தத்தில் நம்மவர்களில் பலர், வெகு லாகவமாய்ச் சண்டை செய்த திறத்தைக்கண்டு வியந்த இராஜாங்கத்தார் நம்மவர்களில் சிலருக்கு இராணுவத்தில் உயர்ந்த உத்யோகங்களைக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கின்றனர். வருஷாவருஷம் சில இந்தியர்களைப் பொறுக்கி யெடுத்து, இராணுவ விஷயமான பயிற்சி கொடுத்துப், பின் உத்யோகம் கொடுக்கவேண்டுமென அவர்கள் தீர்மானித்திருக்கின்றனர். இதன்றியும் இந்த யுத்தம் நிகழும் காலம்வரையில்தாற்காலிகமான ராணுவ உத்யோகங்களில் சிலவற்றையும் இந்தியர்களுக்குக் கொடுக்கப் போகின்றனர். இப்படிப் பட்டவர்கள் ஸிவில்,மிலிடரி என்ற இரண்டு இலாகாவிலிருந்தும் தேர்ந்தெடுக்கப் படுவார்கள். அவர்களுடைய வயது 19க்குக் குறையாமலும், 25 க்கு மேற்படாமலும் இருக்க வேண்டுமென்பது விதி. ஸிவில் இலாகாவிலிருந்து தேர்ந்தெடுக்கப் படுபவர்கள் இராஜப் பிரதிநிதியால் நியமனம் பெறுவார்கள். இந்த ஏற்பாட்டின்படி 'இந்தூர் ட்ரெயினிங் ஸ்கூலில்' சேரவேண்டியதற்காகப் பஞ்சாப் மாகாணத்திலிருந்து 18 பேரும், ஐக்கிய மாகாணங்களிலிருந்து 4 பேரும், பர்மா, பம்பாய், சென்னை, குடகு மாகாணங்களிலிருந்து இரண்டு இரண்டுபேரும், சுதேச ராஜ்யங்களிலிருந்து ஏழுபேரும், வடமேற்கு எல்லை மாகாணத்திலிருந்து மூவரும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். அவர்கள் அனைவரும் நாளது மாதம் ஷைபள்ளிக்கூடத்தில் ஆஜராகியிருக்கவேண்டுமென்று உத்திரவாகியிருக்கிறது. சென்னையிலிருந்து 2 பேர்மட்டுந்தான் தெரிந்தெடுக்கப்பட்டது, நமக்குச் சற்று வருத்தத்தையே கொடுக்கிறது.

* * *

**சென்னையில் கபவாதஜுரம்**

இன்புளுவென்ஸா என்னும் மாயப் பெயருடன் விளங்கும் இப் பாழும் ஜுரம், சென்னையில் கடந்த சில வாரங்களாக நாள்தோறும் பலநூறு பேர்களைத் தனக்குணவாகக் கொலை செய்து வருவதைக் கண்ட கவர்ன்மெண்டார் மனமிரங்கி, பலவித ஏற்பாடுகளைச் செய்துள்ளது பாராட்டத்தக்கது. ஆனால் இந்த ஜுரத்தின் லக்ஷணங்களைக் கவனித்துச் சர்ச்சைசெய்வதிலும், அஜ்ஜுரம் தற்காலம் விளங்குவதற்குக் காரணங்களைக்கண்டு அவற்றைத் தடுக்க முயற்சிப்பதே இராஜாங்கத்தின் உரிமையாகும். தற்காலம் விளங்கும் க்ஷாமமும், உணவுப்பொருள் பஞ்சமும், இந்நிலைமைக்கு உரமாகி யிருப்பதைக் கண்டு அவற்றை நிவர்த்திசெய்ய அவர் முந்துவரென நம்புகிறோம்.

ஆயிரத்திலே பிறந்து ஐஞ்ஞூற்றிலே கால் நீட்டினதுபோல.